பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 03 வெள்ளிக்கிழமை 19.07.2024 கதிர் 254

## ஞானசார தேரருக்கு கிடைத்தது பிணை

நான்குவருடகடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கலகொட அத்தேஞானசாரதேரரை பிணையில் விடுவிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

ஞானசார தேரரால் சமர்ப்பிக்கப்பட்ட மறுசீராய்வு மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்டதன் பின்னரே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சம்பத் அபேகோன் உள்ளிட்ட மேன்முறையீட்டு நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஞானசார தேரரை 50,000 ரூபா பிணையிலும் 5 இலட்சம் ரூபா பெறுமதியிலான 2 சரீர பிணைகளிலும் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2016 மார்ச் 30ஆம் திகதி கூரகல விகாரை தொடர்பில், இஸ்லாம் மதத்தை இழிவுபடுத்தும்வகையில் வெளியிட்ட ☞2

### பொருளாதார முன்னேற்றம் குறித்து

## பகிரங்க விவாதத்திற்கு வாருங்கள் நிதி ராஜாங்க அமைச்சர் அழைப்பு

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க கடந்த இரண்டு ஆண்டுகளில் பொருளாதாரத்தை மீட்கச் செய்த சாதகமான முயற்சிகள்தொடர்பில்பகிரங்கவிவாதத்திற்கு வாருங்கள் என்று எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், ஜனாதிபதியின்முயற்சிகளை விமர்சிக்கும் பொருளாதார நி-புணர்களுக்கும்அழைப்பு விடுத்திருக்கிறார் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகயிலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தல் என்பது மக்களின் ஜனநாயக முடிவுகளில் மிகவும் வலுவானமுடிவாகஅமையும் என்பதை நாம் அறிவோம். இவ்வாறான வேளையில் இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த நாட்டின் நிலைமையையும்இன்றைய நிலைமையையும்ஒப்பிட்டுப் பார்ப்பதற்கானகளமொன்று அமைக்கப்பட வேண்டும். மக்களின் பாதுகாப்பு, நலன் மற்றும் மேம்பாடு என்பன ஆளும்தரப்பின் பொறுப்பாகும். எனவே, இந்த இக்கட்டான காலகட்டத்தில் பகிரங்கவிவாதங்களுக்கான அவசியம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் நாட்டை மீட்பதற்கான சவாலை ஏற்றுக்கொண்ட தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ☞8

### இ னி து ரகசியம் அல்ல!

ஏதாவது ஒன்றைச் செய்-து ஜனாதிபதித்தேர்தலைப்பிற்போடலாம் என்கிறரணிலின்முயற்சிக்குஆளும் தரப்புக்குள்ளேயே ஆதரவற்ற நிலை தோன்றி வருகின்றது. ஏற்கனவே மொட்டுக் கட்சி முரண்டு கொண்டு நிற்கின்றது. ரணில் தங்கள் கட்சியில் போட்டியிடாவிடால் அவருக்கு ஆதரவில்லை என்ற நிலையை நோக்கியே அந்தக் கட்சி நகர்கிறது. மொட்டின் ஆதரவு இல்லை என்றால் 22ஆவது திருத்தமாகக்கொண்டுவரப்படவுள்ள அரசமைப்பின்83ஆம்டிபிரிவுக்கான திருத்தத்தை நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டுபெரும்பான்மையின் மூலமாகக்கூ-ட நிரூபிக்க முடியாது. நாடாளுமன்றத்தில்நிறைவேற்றாமல் அதற்கு மக்களின் அங்கீகாரத்தைக் கோர முடியாது.

அதற்கிடையில் அமைச்சரவைக் குள்ளேயேகூட இந்தத் திட்டத்திற்கு ஆதரவில்லை என்பது வெளிப் பட்டுள்ளது. கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இதுதொடர்பாகஜனாதிபதி முன்வைத்த பிரேரணைக்கு அனுமதி வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டாலும், ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் வரை அரசமைப்பின்22ஆவதுதிருத்தம்குறித்த வர்த்தமானியைநிறுத்திவைக்குமாறு நீதியமைச்சின்செயலாளருக்கு ☞2

# சிறிய, நடுத்தர தொழில்களுக்கு குறைந்த வட்டியில் புதிய கடன்

### ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன் அறிமுகம்

நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை மீள வலுவூட்டும்நோக்கில்ஆசியஅபிவிருத்தி வங்கியின் உதவியுடன் புதிய கடன் திட்டம் நிதி அமைச்சரான ஜனாதிபதியால் நேற்று அறிமுகப் படுத்தப்பட்டது.

நுண், சிறு மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கானமுதலீடுமற்றும் செயற்பாட்டு மூலதன வசதிகள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய நிதிவசதிப்பொதியாகஇந்தத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கான நிகழ்வு ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவின்தலைமையில் நேற்று ஜனாதிபதி ☞2

## அடுத்த வார இறுதிக்குள் தேர்தல் திகதி அறிவிப்பு

### ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

அடுத்தவார இறுதிக்குள் ஜனாதிபதி தேர்தலுக்கான திகதியை அறிவிக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

பலவருடங்கள் அனுபவத்தின் அடிப்படையில் வேட்பு மனுத்தாக்கல் செய்யும் அனைத்து வேட்பாளர்களும் சுபநேரத்தினைப் பார்த்து தான் தங்களது விண்ணப்பங்களை எடுத்து வருவார்கள்.

அதேபோன்று வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்காக வருபவர்கள் திசையையும் பார்ப்பார்கள். அதன் காரணத்தினாலேயே நான் சுபநேரம் பார்க்கப்படும் என்ற கருத்தினைக் கூறினேன். அதனைவிடுத்து ராகுகாலத்தினைப் பார்த்துக்கொண்டு திகதியைத் தீர்மானிப்பதாக நான் கூறவில்லை.

திகதியை அறிப்பதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. ☞8

## புலிகள்கூட பாடசாலைகளை மூடியதில்லை அரசியலுக்காக கல்வியை நிறுத்துகிறார்கள்

### அமைச்சர் மனுஷ நாணயக்கார குற்றச்சாட்டு

நாட்டில்தமிழ்மக்கள் விடுதலை புலிகள் பயங்கரவாதஅமைப்பாக இருந்தபோதிலும்,முப்பது வருடகால யுத்தத்தின் போது பாடசாலைகளை மூடுவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதிக்கவில்லை, ஆனாலும் யுத்த சூழலில் இருந்த ஆசிரியர்கள் பதுங்கு குழிக்குள் அமர்ந்து பிள்ளைகளுக்கு கல்வியை வழங்கினார்கள். தொழிற்சங்கங்கள் தமது அரசியல் நலன்களுக்காக 10,000 பாடசாலைகளைமூடுவது வீரமாக கருதுகின்றனர் என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார் ☞8

## ஜனாதிபதி தேர்தல் திகதியை உடனடியாக அறிவியுங்கள்

### லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. வலியுறுத்து

இந்தமாதஇறுதிவரை காத்திருக்காதுஜனாதிபதித் தேர்தலுக்கானதிகதியை தேர்தல்கள் ஆணைக் குழு உடனடியாக அறிவிக்கவேண்டும் என்று பிரதான எதிர்க் கட்சியானஐக்கியமக்கள் சக்தியின்பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று கட்சித் தலைவர்களின் கூட்டம் இடம்பெற்று முடிந்த பின்னர் அதுதொடர்பில் செய்தியாளர்களுடன் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞2

## கல்வித்துறையினது மறுசீரமைப்புக்கு யுனெஸ்கோவின் ஆதரவு பெறப்படும்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

கல்வித்துறையில் முன்னெடுக்கப்படவுள்ள விரிவான நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்திற்கு யுனெஸ்கோ அமைப்பின் கல்வி பிரிவிடமிருந்து ஆதரவு பெற்றுக்கொள்ளும் ஆதேவேளைஅதற்கான மறுசீரமைப்புச் செயற்பாடுகளுக்காக உலக வங்கி,ஆசியஅபிவிருத்தி வங்கியின்உதவிகளை பெற்றுக்கொள்ளவிருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவுஉள்ளிட்டநவீன தொழிநுட்பத்துடன்முன்னோக்கிச் செல்லும் மேம்பட்ட கல்வி முறையொன்றை நாட்டில் உருவாக்கி, இந்நாட்டு பிள்ளைகளுக்கு நவீன உலகத்துடன் முன்னேறுவதற்கான வாய்ப்பை வழங்க எதிபார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மொனராகலை புதுருவகல ☞2

## ஜப்பானின் அபிவிருத்தி பணிகளை மீண்டும் தொடங்குவதற்கு தயார்

### அந்த நாட்டின் தூதுக் குழு அறிவிப்பு

கடன் மறுசீரமைப்பு செயல்முறை வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதால், கடந்த காலத்தில் இடைநிறுத்தப்பட்ட திட்டங்கள் உள்ளிட்ட ஜப்பானிய உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியின் (நும்பு)கீழ்இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களை மீள ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாக இலங்கைக்கு வருகை தந்துள்ள ஜப்பானிய தூதுக்குழுவின் தலைவர் கலாநிதி இசுமி ஹிரோடோதெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன்கைகோர்த்து உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள்குழுவுடன் இணைந்து மிகக் குறுகிய காலத்தில் ☞8

## ராஜபக்சக்களின் ஆதரவு பெற்ற வேட்பாளருக்கு ஆதரவில்லை

### பாட்டலி சம்பிக்க ரணவக்க அறிவிப்பு

நாட்டை வக்குரோத்துநிலைக்குத் தள்ளிய ராஜபக்சக்கள் ஒத்துழைப்பு வழங்கும் ஜனாதிபதி வேட்பாளருக்குநாங்கள்ஆதரவு வழங்கப்போவதில்லை என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களுடன் பேசும்போது அவர் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டைக் ☞2

### தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்தாது

## அதிகாரிகள் பாராமுகமாக இருந்தால் அவர்களுக்கு எதிராக இனி வழக்கு

நாடளாவிய ரீதியில் இடம்பெறும் தேர்தல் முறைகேடுகள்தொடர்பில் தேர்தல் சட்டங்களுக்கு அமைவாகச் செயற்பட வேண்டிய அரச அதிகாரிகள் பாராமுகமாகச் செயற்பட்டால், அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவிருப்பதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் எச்சரித்துள்ளன.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் ☞2

காலைக்கதிர்
Kalaikkathir

# பேரிடர் தயார் நிலைக்கான உபகரணங்கள் அன்பளிப்பு

## அமெரிக்கா வழங்கியது

காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய பேரிடர் மற்றும் அவசர சூழ்நிலைகளுக்கு முகங்கொடுப்பதற்கு இலங்கை தயார் நிலையில் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் அவசியமான உபகரணங்களை அமெரிக்கா இலங்கையின் இடர் முகாமைத்துவ நிலையத்துக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் மனிதாபிமானஉதவிகளுக்கானபணியகத்தின் நிதியுதவியின்கீழ் ஐக்கிய நாடுகள் உலக உணவுத்திட்டத்தின் ஊடாக இலங்கைக்கு இந்த உபகரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. உலக உணவுத்திட்டத்தின் விசேட நடவடிக்கைகளுக்காக அமெரிக்க முகவரகத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 2.5 மில்லியன் டொலர் நிதியின் ஒருபகுதியே மேற்குறிப்பிட்ட உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த உபகரணங்கள் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் மனிதாபிமான உதவிகளுக்கான பணியகத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியமனிதாபிமானஆலோசகர் டஸ்ரின் ஷியோவினால் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் உதய ஹேரத்திடம்கையளிக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதரகத்தின் அதிகாரி டக் சொனெக், 'உயிர்களையும், சொத்துக்களையும் பாதுகாப்பதும், அனர்த்தங்களால் மக்கள் மத்தியில் ஏற்படும் தாக்கத்தைக் குறைப்பதுமே அமெரிக்காவினால் இலங்கையிலும், உலகளாவிய ரீதியிலும் முன்னெடுக்கப்பட்டுவரும் மனிதாபிமான அனர்த்த உதவி செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்' எனச்சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு அனர்த்தங்களைத் தடுப்பதற்கும், அவற்றின் தாக்கங்களைக் குறைப்பதற்கும் இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ நிலையம் கொண்டிருக்கும்இயலுமையைமேம்படுத்தும் நோக்கில் அதன் அதிகாரிகளுடன் தாம் தொடர்ந்து இணைந்து பணியாற்றிவருவதாகவும், இது இலங்கையின் அவசர சூழ்நிலைகளின்போதுஅவசியமான உதவிகளை வழங்குவது தொடர்பில் தாம் கொண்டிருக்கும் அர்ப்பணிப்புடன்கூடியகடப்பாட்டைக் காண்பிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இனி இது .....

தான் உத்தரவிட்டுள்ளார் என்று நீதியமைச்சர் கலாநிதிவிஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 83ஆவது சரத்தில் திருத்தப்படாதுள்ள தவறொன்றைத்திருத்துவதற்காகவே நாம் 22ஆவது அரசியலமைப்புத் திருத்தினை கொண்டுவருதற்கு இருந்தோம். இந்தத் தவறு காணப்பட்டமையால்தான் நீதிமன்றத்தில்மூன்றுக்கும்மேற்பட்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. எனினும் நீதிமன்றம் தெளிவான தீர்ப்புக்களை வழங்கியுள்ளது.

எதிர்காலத்தில் அரசியலமைப்பு தொடர்பாக எந்தவிதமான சந்தேகங்களும் ஏற்படக்கூடாது என்பதற்காகவே திருத்தத்தினை மேற்கொள்வதற்கான யோசனையை முன்வைத் தோம். எனினும், ஊடகங்கள் வாயிலாக பொதுமக்களுக்கு தேர்தல் தொடர்பில் நம்பிக்கையீனத்தினை ஏற்படுத்தும் வகையில் தகவல் சென்றுள்ளது. தேர்தலை ஒத்திவைப்பதற்காக இந்த அரசமைப்பு திருத்த முயற்சி பயன்படுத்தப்படும்என்றுகூறப்பட்டு வருகின்றது.

தேர்தல் காலத்தில் பொதுமக்களுக்கு அவ்விதமான சந்தேகம் எற்பட வேண்டிய அவசியமில்லை. ஆகவே எமது நீதியமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதி தேர்தல் நிறைவடையும் வரையில்22ஆவதுதிருத்தச்சட்டமூல யோசனையை வர்த்தமானியில் வெளியிடுவதை இடைநிறுத்துமாறு ஆலோசனை வழங்கியுள்ளேன்"" என்கிறார் நீதி அமைச்சர்.

அதுபோன்றே அரசமைப்புத் திருத்தம் அடுத்தவாரம் நாடாளுமன்றத்திற்கு விவாதத்திற்கு வராது என்றும் அப்படியே வந்தாலும் தாம் அதற்கு ஆதரவு வழங்கமாட்டோம் என்று மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்றைய தினம்கட்சித்தலைவர்கள்கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறும். 19ஆவது திருத்தத்தில் காணப்படும் குறைபாடுகளிற்கு தீர்வை காண்பதற்கான திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். எனினும் அந்த விடயங்களை ஜனாதிபதி தேர்தலிற்கு பின்னர் பரிசீலிக்கலாம்.

தேர்தல்களை தாமதிக்கும் நோக்கிலேய அரசமைப்புத் திருத்தங்கள் கொண்டுவரப்படுகின்றன என்று எதிர்க்கட்சியினர் பரப்புரை செய்கின்றார்கள். உண்மையில் தேர்தலை பிற்போடுவது எமது நோக்கமல்ல.

அந்த வகையில் அரசமைப்பில் திருத்தங்களைமேற்கொள்வதற்கான யோசனையைஅடுத்தபாராளுமன்ற அமர்வில் எடுத்துக்கொள்வதற்கான நிர்ணயங்கள் செய்யப்படவில்லை. அத்துடன் அந்த திருத்தமானது தேர்தல்களை தடுப்பதை நோக்கமாகக் கொள்ளவில்லை

அதுமட்டுமன்றி அரசியலமைப் புத் திருத்தம் வரப்போவதில்லை. அவ்வாறு வந்தாலும் நாம் ஆதரவளிக்கப்போவதில்லை என்றார் அவர்.

ஆக மொத்தத்தில் ரணிலின் கடைசி பிரம்மாஸ்திரமும் மெல்ல மெல்லசெயலிழந்துவருவதாகத்தான் தோன்றுகின்றது. அதனால் தேர்தலை எதிர்கொள்வதைத் தவிர அவருக்கு வேறு வழியில்லாமல் போகலாம்.

....................................

கூட்டமைப்பின் தலைமைப் பதவிக்கான ஆசை ரெலோவுக்கு இன்னும் போகவில்லை. முதலில் கேட்டுப் பார்த்தவர்கள் இப்போது மிரட்டிப் பார்க்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

முல்லைத்தீவில் நேற்று செய்தியார்களிடம் பேசிய ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், கூட்டமைப்பின் தலைமையைத் தராவிட்டால் அடுத்தடுத்த தேர்தல்களில் தமிழ் அரசுக்கட்சியைத்தமதுகூட்டணியில் இணைக்க முடியாது என்று மிரட்டியிருக்கிறார்.

''தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு, எதிர்வரும் தேர்தல்கள் உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் தமிழ் அரசுக் கட்சியையும்இணைத்துக்கொண்டு ஒன்றாக அணிதிரள வேண்டும் என்பதுதான் எனது பிரதான நோக்கமாக உள்ளது.

அந்த நோக்கத்தினை தமிழ் அரசுக் கட்சியில் உள்ள பலர் ஏற்றுக்கொண்டுள்ளனர். அவ்வாறு இருக்கையில் அனைத்து விடயங்களையும் தமிழ் அரசுக் கட்சியேவைத்துக்கொள்ளவேண்டும் என்ற நிலைப்பாடு காணப்படுகின்றமையானது ஒற்றுமை காணல் நீராகச் செய்வதற்கான வாய்ப்பினையே ஏற்படுத்தும்.

நாடாளுமன்றக் குழுவின் தலைவர் பதவிக்காக பிரிந்து செல்வது முக்கியவிடயமல்ல. தமிழரசுக்கட்சி ஒற்றுமையாகச் செயற்படுவதற்கான வாய்ப்பை கருத்தில்கொள்ளவேண்டும்என்பதே எமது கருத்தாகும் என்றார்.

அதுதான் ஜனநாயகக் கூட்டணியில் இணைத்தலைமைப் பதவி இருக்கிறதே, பிறகெதற்கு கூட்டமைப்பின் தலைமைப் பதவி?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சிறிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்தில் நடைபெற்றது.

மானியவட்டிவிகிதத்தில்அனுமதி பெற்ற வணிக வங்கிகள் மற்றும் அனுமதி பெற்ற விசேட வங்கிகள் உட்பட 15 நிதி நிறுவனங்கள் மூலம் இந்தக் கடன் வழங்கப்படும். நெருக்கடியை எதிர்கொண்டு செயற்படும்நுண், சிறுமற்றும்மத்திய தொழில்முயற்சியாளர்களுக்கு நிவாரணம் வழங்கல் மற்றும் செயற்பாடற்ற கடன் பிரிவின் கீழ் இருக்கும் நுண், சிறு மற்றும் மத்திய தொழில்முற்சிகளுக்காக ஒத்துழைப்பு வழங்குதல் ஆகிய பிரதான இரு பிரிவுகளின் கீழ் இந்தக் கடன் வழங்கப்படும்.

நிதிஉதவிதேவைப்படும்மற்றும் அவர்களின்வணிகங்களைமேலும் மேம்படுத்தும் திறன் கொண்ட தகுதியுள்ள நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு தொழில்துறை அமைச்சினால் பரிந்துரைக்கடிதங்கள்வழங்கப்படும்.

இந்தக் கடன் திட்டத்தின் கீழ், 10 வருட காலத்திற்கு 7% சலுகை வட்டி விகிதத்திற்கு உட்பட்டு, அதிகபட்சமமாக 15 மில்லியன் ரூபாய் கடன் வழங்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்திற்காக 13 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. .

செயற்படாத கடன் பிரிவின் கீழ் உள்ள நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு மூலதனமாக 5 வருட காலத்திற்கு உட்பட்டதாக 8 வீத கடன் வட்டியின் கீழ் 5 மில்லியன் ரூபா கடன் வழங்கப்படுவதோடு அதற்காக 5 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி, ஹட்டன் நேஷனல் வங்கி, செலான் வங்கி, சம்பத் வங்கி, கொமர்ஷல் வங்கி, டி.எப்.சி.சி. வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, சனச அபிவிருத்தி வங்கி லிமிடெட், யூனியன் வங்கி, பான் ஆசியா வங்கி, கார்கில்ஸ் வங்கி ஆகியவை பங்கேற்பு நிதி நிறுவனங்களாகச் செயற்படும்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, எந்தவொரு நாட்டையும்முன்னேற்றப்பாதைக்கு இட்டுச் செல்வதற்கு நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களைப் பலப்படுத்த வேண்டும்.

கடந்த பொருளாதார வீழ்ச்சியினால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் இலங்கையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தரதொழில்முயற்சியாளர்களே, அவர்களின் மீட்சிக்கு ஆளும்தரப்பு முன்னுரிமை அளித்து வருகிறது. அவர்களுக்குத் தேவையான மூலதனத்தை வழங்குவதற்காக தேசிய அபிவிருத்தி வங்கி ஒன்று உருவாக்கப்படும் - என்றார்.

## ஞானசார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து, இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவிக்கப்பட்டுள்ளதாக, ஞானசார தேரருக்கு எதிராக சட்ட மா அதிபரால் தாக்கல்செய்யப்பட்டிருந்த வழக்கின் இரண்டுகுற்றப்பத்திரங்களிலும்அவர் குற்றவாளி என நிரூபணமானது.

அதனைத் தொடர்ந்து மார்ச் 28ஆம்திகதி கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்யபட்டபெந்தி, கலகொட அத்தே ஞானசார தேரருக்கு நான்கு வருட கடூழியச் சிறைத்தண்டனையும்ஒருஇலட்சம் ரூபா அபராதமும் விதித்தார்.

அத்தோடு ஏப்ரல் 03ஆம் திகதி ஞானசார தேரருக்கு, பிணை வழங்குமாறு முன்வைக்கப்பட்ட மனுவை கொழும்பு மேல் நீதிமன்றம் நிராகரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## அதிகாரிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கத்தின் (பெப்ரல்) நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி, அரச அதிகாரிகளின் ஆதரவின்றி அரசியல்வாதிகளால் தேர்தல் சட்டங்களைமீறிச்செயற்படமுடியாது எனச் சுட்டிக்காட்டியுள்ளார். அதுமாத்திரமன்றி இவ்வாறான நடவடிக்கைகளுக்குமுற்றுப்புள்ளியிட வேண்டும்எனவும், அடுத்தகட்டமாக நீதிமன்றத்தை நாடவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

''ஊவா, வடக்கு, வடமத்திய மாகாணம் உள்ளிட்ட சில மாகாணங்களின் ஆளுநர்கள் உள்ளூராட்சிமன்றத்தேர்தல்வேட்பாளர்களைப்பல்வேறுஅரசபதவிகளில் நியமித்துள்ளனர். இது குறித்து நாம் எமது சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடிவருகின்றோம்'' எனவும்ரோஹணஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு நாட்டின் தலைவர் தேர்தல் சட்டங்களுக்கு மதிப்பளிக்காவிடின், தாம் உயர் நீதிமன்றத்துக்குச் செல்லவேண்டியிருக்கும் எனச் சுட்டிக்காட்டியுள்ள அவர், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுமார் 20 வேட்பாளர்கள் களமிறங்கக்கூடும் எனவும் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளார்.

அதேவேளை இவ்விடயம் தொடர்பில் பிரஸ்தாபித்துள்ள ஜனநாயகமறுசீரமைப்புக்கள்மற்றும் தேர்தல் கற்கைகள் நிலையத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க, ஆளும்தரப்பு தேர்தல் நோக்கங்களுக்காக அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்துவதாகக் குற்றஞ்சாட்டினார்.

## கல்வித்துறையினது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகா வித்தியாலய மாணவர் நாடாளுமன்றத்தின் ஆரம்ப அமர்வு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதில்கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அண்மையில் மொனராகலை புதுருகல மகா வித்தியாலயத்திற்குச் சென்றிருந்தபோதுமாணவர்களுக்கு விடுத்த கோரிக்கைக்கு அமைவாக பாடசாலை மாணவர்களினால் நாடாளுமன்றத்தின் ஆரம்ப அமர்வு ஜனாதிபதி அலுவலக பிரதான கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது.

பாடசாலையின் மாணவர் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 96 உறுப்பினர்கள் மாணவர் நாடாளுமன்றத்திற்கு வருகைதந்ததுடன் அவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் நாடாளுமன்ற பொது செயலாளர் குஷானி ரோஹணதீர தலைமையில் நடைபெற்றது.

இந்த மாணவர் நாடாளுமன்றத்தின் மூலம் நாட்டைக் கட்டியெழுப்பும் எதிர்காலத் தலைவர்கள் உருவாவர். அதற்காக இங்கிருந்து பெரும் அனுபவத்தை பெற்றுக்கொள்ள முடியும் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பல பாடசாலைகளில் மாணவர் நாடாளுமன்றங்கள் இயங்கி வருவது மகிழ்ச்சிக்குரியதாகும் என்றும் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகம் அமைந்துள்ளபழையநாடாளுமன்ற கட்டடத்தின் வரலாற்று மற்றும் புராதன பின்னணியை மாணவர்களுக்கு விளக்கிய ஜனாதிபதி, மாணவர்களுடன் சிநேகபூர்வமாககலந்துரையாடினார். அதனையடுத்து அரசமைப்புச் சபை மற்றும் நாடாளுமன்ற முறைமை தொடர்பிலும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சித் தலைவர்களின் கூட்டம் இடம்பெற்றது. இதில் அரசமைப்பு திருத்தம் தொடர்பாக எதுவும் பேசப்படவில்லை. என்றாலும்அடுத்த நாடாளுமன்ற அமர்வின்போது அரசமைப்புத் திருத்தம் ஒன்றை கொண்டுவருவதற்கான சாத்தியம் இருக்கிறது.

அத்துடன் ஜூலை 17க்குப் பின்னர் ஜனாதிபதி தேர்தலுக்கான அழைப்பு விடுத்து, திகதியை அறிவிப்பு செய்வதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைக்கிறது என்பது அனைவரும் அறிந்திருந்த விடயம். என்றாலும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இந்த மாதம் இறுதியில் அறிவிப்பதாக தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார். தேர்தலுக்கான திகதியை அறிவிப்பதற்குஏன்மாதஇறுதிவரை பார்த்துக்கொண்டிருக்கவேண்டும் எனக் கேட்கிறேன். தேர்தல் ஆணைக்குழுவின் இந்த நடவடிக்கையில் எமக்குச் சந்தேகம் எழுகிறது.

தேர்தலைப் பிற்போடுவதற்கு ஏதாவது வழிவகைகளை அமைத்துக்கொள்ள ஆளும்தரப்புக்குச் சந்தர்ப்பம் வழங்குவதற்கே தேர்தலுக்கான திகதியை அறிவிப்பு செய்யாமல் தேர்தல் ஆணைக்குழு பின்தள்ளி வருகிறது. அவ்வாறு இல்லை என்றால் மாத இறுதிவரை பார்த்துக்கொண்டிருக்காமல் ஜனாதிபதி தேர்தலுக்கான திகதியை உடனடியாக அறிவிக்க வேண்டும். ஜூலை 17க்கு பின்னர் தேர்தல் தொடர்பான அதிகாரங்கள் தம் கைகளுக்குக் கிடைக்கும் என்பது நீண்ட நாட்களுக்கு முன்பே அவர்களுக்குத் தெரியும். அப்படியானால் அவர்கள் அதற்குத் தயாராகி இருக்கவேண்டும்.

நாங்களும் தொடர்ச்சியாக 35 வருடங்காள நாடாளுமன்றத்தில் இருக்கிறோம். அரச அதிகாரிகள் திரும்பும்போது, இதற்குத்தான் திரும்புகிறார்கள் என்பது எங்களுக்கும் புரிகிறது. அதனால் ஜூலை 17க்குப் பின்னர் மேலும் 10, 12 நாட்கள் காத்திருப்பதென்பது ஆளும்தரப்புக்கு இடமளிப்பதாகும். அடுத்த வாரம் நாடாளுமன்றம் கூடும்போது, அதன் மூலம் அல்லது நீதிமன்றம் மூலம் தேர்தலை பிற்போடுவதற்கு ஏதாவது தடை ஒன்றைக் கொண்டுவருவதற்கு ஆளும்தரப்பு இடமளித்திருக்கிறது.

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில்உயர்நீதிமன்றம்இரண்டு தடவை தீர்ப்பளித்திருக்கிறது. அதேபோன்று தேர்தலுக்கு தேவையான பணத்தை வழங்குவதாக ஆளும்தரப்பு தெரிவித்திருக்கிறது. அப்படி இருக்கையில் ஏன் தேர்தலுக்கான திகதியை அறிவிக்க இன்னும் காலம் எடுக்கவேண்டும்? அதனால் ஓரிரு நாட்களுக்குள் ஜனாதிபதி தேர்தலுக்கான திகதியை அறிவிக்கவேண்டும் என நாங்கள் தேர்தல் ஆணைக்குழுவை கேட்டுக்கொள்கிறோம்.

தேர்தலை விரைவாக நடத்துமாறு ஐக்கிய தேசிய கட்சியும் தெரிவித்திருக்கிறது. ஆனால் திரைக்குப்பின்னாலே அனைத்தும் வேறுமாதிரி இடம்பெறுகிறது. மாகாணசபை, உள்ளூராட்சி மன்ற தேர்தல்களுக்கு என்ன நடந்தது என்பது எங்களுக்குத் தெரியும். அதனால் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என இவர்கள் பகிரங்கமாகத் தெரிவித்தாலும் திரைக்குப் பின்னிருந்தே மற்ற வேலைகளை செய்கிறார்கள் என்றார்.

## ராஜபக்சக்களின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டியெழுப்பும் விரிவான செயற்திட்டத்தை நாங்கள் வெளிப்படுத்தியுள்ளோம். பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கும், குடும்பங்களின் தரத்தை மேம்படுத்துவதற்கும் குறுகிய மற்றும் நீண்டகால அடிப்படையில் நடைமுறைபடுத்த வேண்டிய திட்டங்களை முன்வைத்துள்ளோம்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் உத்தியோகபூர்வமான அறிவிப்பு விடுக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது. இருப்பினும் ஒரு தரப்பினர் ஏதாவதொரு வழியில் தேர்தலைப் பிற்போடுவதில் விசேட கவனம் செலுத்தியுள்ளார்கள்.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# 1350இற்கும் மேற்பட்ட உள்ளூராட்சிமன்ற ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கினார் கிழக்கு ஆளுநர் செந்தில்





(பாறுக் ஷிஹான்)



கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் 10 வருடங்களுக்கு மேலாக தற்காலிக நியமனத்தில் பணிபுரிந்து வரும் ஊழியர்கள் தமது நிரந்தர நியமனங்கள் குறித்து கடந்த கால ஆளுநர்கள் மற்றும் பல்வேறு தரப்பினர்களிடம் கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர்.

அவர்களால் எவ்வித வெற்றிகரமான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படாத நிலையில், சம்பந்தப்பட்ட ஊழியர்கள் தங்களது நிரந்தர நியமனம் குறித்தும், நிரந்தர நியமனம் இல்லாததால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

ஆளுநர் செந்தில் தொண்டமான் இந்த விடயம் குறித்து ஜனாதிபதி, பிரதமரின் கவனத்திற்குகொண்டுசென்று உரியதீர்வைப் பெற்று தருவதாக உறுதியளித்திருந்தார்.

ஆளுநர் செந்தில் தொண்டமானால் உரிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு 1350 இற்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு ஒரே நாளில் நிரந்தர நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டது. அதில் முதல் கட்டமாக அம்பாறை மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

ஒன்பது மாகாணத்திலும் உள்ளூராட்சிமன்ற ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது குறித்து பிரச்சினைகள் இருந்த போதும் கிழக்கு மாகாண ஆளுநர் இதுக்குறித்து அதிகம் கவனம் செலுத்தி ஒரே நாளில் இந்நியமனங்களை வழங்கி வைத்தமை என்பது பாராட்டுகிரியது என நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், 10 வருடமாக காணப்பட்ட தங்களது பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை ஒரு வருடக் காலத்திற்குள் பெற்றுத்தந்த ஆளுநருக்கு உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் தமது நன்றிகளை தெரிவித்துள்ளனர்.(05)

# யட்டியானவில் பஸ்மோதி வயோதிபர் உயிரிழந்தார்

## சாரதி கைது

திஹகொட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாத்தறை - ஹக்மனை வீதியில் யட்டியான பகுதியில் உள்ள எரிபொருள் நிலையத்திற்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என திஹகொட பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து புதன்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

மாத்தறை, அபரெக்க பகுதியில் வசிக்கும் 77 வயதுடைய வயோதிப ரொருவரே உயிரிழந்துள்ளார்.

ஹக்மனைநோக்கிப்பயணித்தபஸ் ஒன்று வீதியில் பயணித்த வயோதிபர் ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரது சடலம் மாத்தறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, பஸ் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திஹகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# பாடசாலை நேரத்தில் பிரத்தியேக வகுப்பு நடத்திய ஆசிரியர் அ'புரத்தில் இடைநீக்கம்

அநுராதபுரத்தில்பாடசாலைநேரத்தில்பிரத்தியேக வகுப்புக்களைநடத்தியஆசிரியர்ஒருவர்உடனடியாக இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கணிதப் பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர் பாடசாலை நேரத்தில் பிரத்தியேக வகுப்புகளை நடத்துவதை வழக்கமாக கொண்டுள்ளதாகவும், பாடசாலைக்கு வருகைதந்து கையொப்பமிட்டு பிரத்தியேக வகுப்பு செல்வதாகவும் பெற்றோர்கள் குழுவொன்று வடமத்திய மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.டபிள்யூ. சமரக்கோனிடம் முறைப்பாடு செய்திருந்தது.

அந்த முறைப்பாட்டின் பேரில், மாகாணக் கல்விப் பணிப்பாளர், ஏனைய பணியாளர்கள் குழுவுடன் இணைந்து பாடசாலையை ஆய்வு செய்த போது, இந்த ஆசிரியர், பாடசாலைக்குச் சென்று, ஆசிரியர்களின் வருகைப் பதிவேட்டில் கையொப்பமிட்டு, பாடசாலைக்கு வெளியே சென்று பிரத்தியேகவகுப்பில்மாணவர்களுக்குகற்பித்ததைக் கண்டுபிடித்தனர்.

இதனையடுத்து, இந்த ஆசிரியரை இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

(05)

# விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு




(பி.கேதீஸ்)

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக 2005/2006ம் வருட முகாமைத்துவ பீட மாணவர்களின் பங்களிப்பில் நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட கஸ்ட பிரதேச பாடசாலையான தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலைக்கு அப்பாடசாலையின் ஆசிரியர் பி.கேதீஸ் ஊடாக கரப்பந்தாட்டம்மற்றும்வலைப்பந்தாட்ட பந்துகள் இலவசமாக வழங்கப்பட்டன.

அப்பாடசாலையின் ஆசிரியர் பி.கேதீஸிடமிருந்து பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ் பந்துகளை பெற்றுக்கொள்வதை காணலாம்.

(05)

# எமது சமூகத்தின், நாட்டின் தலைவிதியை இளைஞர்கள் மாற்றும் காலம் வந்துவிட்டது

## கிழக்கின் கேடயம் தலைவர் எஸ்.எம். சபீஸ் தெரிவிப்பு



இதுஉங்களுடையதும்நமதுமக்களுடையதுமான வாழ்க்கைப் போராட்டமாகும். தொடர்ச்சியாக மக்களை ஏமாற்றி வெற்றி பெறுவதற்கு எமது மக்கள் விளையாடும் கார்ட்ஸ் அல்ல. இதன்பின்னர்



தலைநிமிர்ந்து நிற்கும் மக்களை உருவாக்க வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது. கடந்த 30 வருடத்துக்குள் உலகம் எவ்வளவோ மாற்றம் பெற்றுவிட்டது. இருந்தும் நமது மக்கள் இன்னமும் அடிப்படை தேவைகளுக்காக அவதியுறுகின்றார்கள் என்றால் நம்மை வழிநடத்துபவர்கள் சரி இல்லை என்றுதானே அர்த்தம். இதனை நாம் சரி செய்யவேண்டும்எனகிழக்கின்கேடயம்தலைவரும், அக்கரைப்பற்று மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான எஸ்.எம் சபிஸ் தெரிவித்தார்.

மருதமுனை விக்டோரியஸ் விளையாட்டு கழகத்தின் புதிய மேலங்கி அறிமுக நிகழ்வும் விக்டோரியஸ்கலர்ஸ்நைட்விழாவும்விக்டோரியஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் மருதமுனை ஓசாக்கா ரேஸ்ட் இன் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்ற போது அங்கு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர் -

ஒளிந்து நின்று பேசிய காலம் போதும். வெளிப்படையாக இளைஞர்கள் முன்வந்துஎமதுசமூகத்தினதும் நாட்டினதும் தலைவிதியை மாற்றும் காலம் வந்துவிட்டது. பாரிய மாற்றங்களோடு சுயதொழில்கள் மூலம் பிற்போக்கு சிந்தனைகளை உடைத்துமுன்னோக்கிநகரும் காலத்துக்கு நாம் வர பிந்தி விட்டோம். இனியும் தாமதிக்க முடியாது. எல்லோரும்ஒன்றாக சேர்ந்து பயணிக்க வேண்டும் என எஸ்.எம் சபீஸ் அங்கு தெரிவித்தார்.(05)

காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## உறைக்கும் யதார்த்தம்

பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை படிப்படியாக மீண்டுவருகின்றபோதிலும், நாடளாவியரீதியில் 10 குடும்பங்களில் 4 குடும்பங்கள் தமது அன்றாட வாழ்வாதார மற்றும் உணவுத் தேவைகளை தங்களது நேரடி வாழ்வாதாரத்தின் மூலம் பூர்த்திசெய்து கொள்ளமுடியவில்லைஎன்று உலக உணவுத்திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது. அதற்காக பல்வேறு மாற்று வழிகளை அந்தக் குடும்பங்கள் தேடவேண்டியிருப்பதாகவும் அது தெரிவித்துள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் வழிகாட்டலின் கீழ் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கையிலுள்ள முகவரமைப்புக்களும், சிவில் சமூக அமைப்புக்களும் இலங்கை ஆளும் தரப்புடன் இணைந்து நடத்திய ஆய்வில் இந்த முடிவு தெரிய வந்திருக்கின்றது. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளைக் கண்டறிவதற்கும், அது குறித்த அவசியமான தகவல்களை ஆளும்தரப்பு மற்றும் மனிதாபிமான உதவி வழங்கல் அமைப்புக்களுக்கு வழங்குவதற்குமான இந்த ஆய்வு ஜூலை 11 முதல் 14 வரையான காலப்பகுதியில் நடத்தப்பட்டிருந்தது.

இந்த ஆய்வின் பின்னர் இலங்கையின் தற்போதைய நிலவரம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள உலக உணவுத்திட்டம், ”பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை படிப்படியாக மீண்டுவருகின்ற போதிலும், நாடு முழுவதும் 10 குடும்பங்களில் 4 குடும்பங்கள் தமது அன்றாட வாழ்வாதார மற்றும் உணவுத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு பல்வேறுபட்ட மாற்றுவழிமுறைகளைக் கையாள வேண்டியிருக்கின்றது என்று சுட்டிக்காட்டியுள்ளது.

அத்தோடு, இலங்கை காலநிலைமாற்ற சவால்களுக்கு முகங்கொடுத்திருப்பதாகவும், அதிகரித்த வெப்பநிலை மற்றும் உயர்வான வெப்பம் என்பன மக்களின் ஆரோக்கியத்திலும், விவசாய நடவடிக்கைகளிலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

உலகஉணவுத்திட்டத்தின் இந்தத்தகவல் ஒருமுக்கியவிடயத்தை வெளிப்படுத்துகின்றது. கடன்மறுசீரமைப்பு, பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவி ஆகியன அடித்தட்டு மக்களின் வாழ்க்கையில் எந்தவித சாதகமான மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை என்பதே அந்த உண்மை. கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நெருக்கடி நிலையிலிருந்து நாடு மீண்டுவிட்டது என்று ஆளும்தரப்புச் சொன்னாலும் அதன் பலாபலன்கள் அடித்தட்டு மக்களைச் சென்றடைய இன்னும் நீண்ட காலம் எடுக்கும் என்பது இந்த ஆய்வின் மறைபொருளாகவும் இருக்கின்றது.

பொருளாதார வல்லுநர்கள், பொருளாதார அவதானிப்பு நிறுவனங்கள் என்பனவும் ஐ.நா. போன்ற உலக அமைப்புக்களும் நாடுகளும்கூட இலங்கையின் விரைவான மீள் எழுச்சியைப் பாராட்டினாலும் மக்கள் பொருளாதார நெருக்கடியின் பாதிப்பிலிருந்து மீண்டு இயல்புவாழ்வுக்குத் திரும்பவில்லை என்பது தேர்தல்களில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது.

40 சதவீதமான குடும்பங்களால் தமது அடிப்படைத் தேவையான உணவைத் தேடுவதற்கே மாற்று வழிகளை நாடவேண்டி இருக்கின்றது என்றால், அவர்கள் பிள்ளைகளின் கல்வி உட்பட ஏனைய அவசியத் தேவைகளை எப்படி நிறைவேற்றுவார்கள்?

இந்தநிலையில்தான் அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே இந்த நாட்டை மீட்டெடுத்தவர் என்கிற பரப்புரை உச்ச வேகத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு அவருக்கு மேலும் ஒரு தவணைப் பதவிக் காலம் வழங்கப்படவேண்டும் என்றும் கேட்கப்படுகின்றது.

அரசுத்தலைவராக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றபோது, பொருளாதார நெருக்கடி நிலையில் இருந்து நாடு மீண்டு இயல்பு நிலைக்குத் திரும்ப 3 ஆண்டுகளாவது செல்லும் என்று தெரிவித்திருந்தார். ஆனால் கடந்த 2 ஆண்டுகளில் பொருளாதார இயல்பு நிலையை நோக்கிய பாதையில் மிகச் சிறிய முன்னேற்றத்தைத்தான் மக்களால் உணர முடிந்திருக்கிறது. புள்ளிவிவரங்களிலும் கணக்குவழக்குகளிலும் அறிக்கைகளிலும் காட்டப்படும் முன்னேற்றம் என்பது மக்களின் வாழ்வியலில் தாக்கத்தை ஏற்படுத்தாத வரையில் மாற்றத்தை ஏற்படுத்தாத வரையில் அது பயனுடையதொன்று என்று மக்கள் உணரப்போவதில்லை.

அப்படிப்பட்ட மாற்றம் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை என்பதைத்தான் உலக உணவுத் திட்டத்தின் அறிக்கை தெளிவுபடுத்துகின்றது.

# யார் வேட்பாளர்? யார் சின்னம்?

என் சத்திய மூர்த்தி

தங்களது மக்கள் என்றாலே, தமிழ் அரசியல் தலைவர்களுக்கு கிண்டலும் கேலியுமாக போய்விட்டது போலும். இல்லையென்றால், நாளுக்கு ஒரு கொள்கை, பொழுதுக்கு ஒரு பரப்புரை என்று அவர்கள் முன்னெடுக்க மாட்டார்கள்.

உதாரணத்திற்கு, தற்போதைய அரசியல் சூழலில், விக்னேஸ்வரன், சிறீதரன், மாவை சேனாதிராஜா மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரைக் கூறலாம். இதற்காக மற்ற தலைவர்கள் எல்லாம் புடம் போட்ட தங்கம் இல்லை. அதாவது இன்றைய அளவில். நேற்றும் நாளையும் அவர்களுடைய நம்பகதன்மை எவ்வாறு இருந்தது அல்லது இருக்கும் என்பது வேறு விடயம்.

இவர்களில் விக்னேஸ்வரனின் நிலையும் நிலைபாடுகளும் அலாதி. ஜனாதிபதி தேர்தலில் பொது தமிழ் வேட்பாளர் என்ற பேச்சு தொடங்கி சூடு பிடிக்கும் முன்னரே, அதற்கு தன்னை தானே முன் மொழிந்தார். ஆனால், அவர் உடல் நலம் குன்றி யாழ்ப்பாண வீட்டில் ஓய்வு எடுத்து வந்தபோது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே அவரை வந்து சந்தித்து அரசியல் உரையாடிய பின்னர், அவர் ரணில் பக்கம் சாய்ந்துவிட்டார்.

அது மட்டுமல்ல. ரணில் தன்னிடம் கூறினார் என்று, எதிரணி வேட்பாளரான சஜித் பிரேமதாசா பதிமூன்றாது தீர்வு திட்டத்தை முழுவதுமாக செயல்படுத்துவேன் என்ற வாக்குறுதியில் பொலிஸ் அதிகாரமும் உள்ளடங்கியதா, என்று கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் விக்னேஸ்வரன் சொல்லாடினார். ஆனால், தொடர்ந்து மூன்று முறை சஜித் அது குறித்த தெளிவான தனது பதிலை பதிவு செய்த பிறகும், விக்னேஸ்வரன் அது குறித்து வாய் திறந்தார் இல்லை. அது போன்றே, தனது ஜனாதிபதி வேட்பாளர் கனவுத் திட்டம் குறித்தும் இப்போதெல்லாம் பேசுவதில்லை.

மாறாக, விக்னேஸ்வரன் இப்போதெல்லாம் தனது தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் முதல் மாநாடு முன்னேற்பாடுகளில் மட்டுமே கவனம் செலுத்துகிறார் என்று தோன்றுகிறது. அதிலும் சிறப்பு, தனது கட்சி மாநாடு நிகழ்ச்சிக்கு முக்கிய விருந்தினராக எதிர் கட்சியான தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சீறிதரனை முன்னிறுத்தி அரசியல் செய்ய விழைகிறார்.

இதில் தவறில்லை. தமிழ் அரசு தான் விக்னேஸ்வரனின் தாய் கட்சி. வட மாகாண முதலமைச்சராக அவர் 2013இல் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்போதைய சம்மந்தன் தலைமையுடன் முறுக்கி கொண்ட பின்னர், தான் தமிழ் தேசிய கூட்டமைப்பில்தான் நேரடியாக இணைந்தவர் எனச் சொல்லி கொள்வார். ஆனால், கூட்டமைப்பிற்கு அமைப்பு ரீதியாக எந்தவொரு உருவமும் உருவகமும் கிடையாது என்பது சட்ட மேதையான அவருக்கே தெரியும்.

அதிலும் குறிப்பாக, அனைத்து கூட்டமைப்பு நாடாளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்கள் போலவே, தானும் தமிழ் அரசுச் கட்சியின் 'வீடு' சின்னத்திலேயே தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற விடயத்தையும் அவர் மறந்திருக்க முடியாது. அந்த வகையில், சொல்வது ஒன்று, செய்வது ஒன்று என்ற அவரது மரபிலக்கணத்திற்கு, பொது வேட்பாளர் குறித்த அவரது நிலைபாடு, பழைய மொந்தையில், பழைய கள். அவ்வளவுதான்.

### என்ன பேசுவார்?

விக்னேஸ்வரனுடைய விடயம் இவ்வாறானால், அவரால் கட்சி மாநாட்டிற்கு முக்கிய அதிதியாக அழைக்கப்பட்டுள்ள சிறீதரன் நிலைமையும் அதில் சிறிதும் குறைவில்லை. பொது வேட்பாளர் விடயத்தில், தமிழ் அரசு கட்சித் தலைமை ஒன்று கூடி பேசி ஒரு முடிவு எடுக்கும் என்று முன்பு பத்திரிகையாளர் முன்பு தெரிவித்தவர் அவர்தான்.

அதேசமயம், அந்த விடயத்தில் தனது புதிய கருத்துக்களை தெளிவுபடுத்தாத விக்னேஸ்வரனின் அழைப்பை ஏற்றுக்கொண்டு, அந்த மாநாட்டில் முக்கிய பேச்சாளராக சொற்பொழிவாற்றப் போவதும் அவர்தான். எங்கே, அந்த மாநாட்டில் அதி புத்திசாலியான பேச்சாளர் எவரேனும், விக்னேஸ்வரனே பொது வேட்பாளர் என்ற கருத்தை முன் வைத்தால், சிறீதரனது கருத்து என்னவாக இருக்கும்?

அல்லது, அந்த மாநாட்டில், விக்னேஸ்வரனே, தன்னையோ அல்லது ரணிலையோ முன்னிலைபடுத்தி பேசினால், அப்போது சிறிதரன் என்ன கூறுவார்? குறிப்பிட்ட பிரச்சினை குறித்து, தனது கட்சியின் (இல்லாத) கூட்டு தலைமையே முடிவெடுக்கும் என்று அறிவித்த பின்னர், அது குறித்து அந்த கட்சி கூடி பேசவில்லை என்பதும் அவருக்கு உறைத்திருக்கும் தானே!

இதற்கு சிறீதரனை மட்டுமே குறை கூறிவிட முடியாது. எப்போது, கட்சி தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதை எதிர்த்து திரிகோணமலை நீதிமன்றத்தில் வழக்கு தொடங்கியதோ, அப்போதே அது குறித்து அவர் பேசுவதை நிறுத்திவிட்டார். ஆனால், பொது வேட்பாளர் குறித்து கட்சி தலைமையின் முடிவை பத்திரிகையாளர்களிடம் தெரிவித்த அவர், அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து அறிந்து கொள்ள முயன்றாரா, என்பது தெளிவாகவில்லை.

### சொல்லாமல் சொல்கிறது

அந்த வகையில், இடைக்கால தலைவராக தொடரும் மாவை சேனாதிராஜா, மற்றும் நாடாளுமன்ற குழு தலைவராக செயல்பட்டு, அரசுடனும் சர்வதேசத்துடனும் தொடர்பில் இருக்கும் சுமந்திரனும்கூட பொது வேட்பாளர் குறித்த தமிழ் அரசு கட்சியின் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்துத் தெளிவாகக் கருத்துக் கூறவில்லை. இது நகைப்பிற்குரிய விடயம்.

தென்னிலங்கை வேட்பாளர்களின் பெயரும், ஊரும், விலாசமும், அதோடு இனப்பிரச்சினை குறித்த அவர்களது சமகால நிலைபாடு குறித்தும் அறிந்த பின்னரே ஒரு முடிவு எடு;க்க முடியும் என்ற அவர்களது நிலைபாடு, பொது வேட்பாளர் விடயத்தில் தாங்கள் ஆதரவாக இல்லை என்பதையே சொல்லாமல் சொல்லுகிறது. இதில் சுமந்திரனின் நிலைபாடு, தெளிவு.

ஆனால், அவ்வாறு எந்த ஒரு தென்னிலங்கை வேட்பாளரின் உறுதிமொழியும் நம்பிக்கை அளிக்கவில்லை என்றால், அதன் பிறகு, ஒரு பொது வேட்பாளர், அவருக்கு என்று ஒரு பொதுச் சின்னம், என்றெல்லாம் கூடி-பேசி, விவாதித்து ஒருமித்த கருத்திற்கு வருவதற்கு அனைத்து தமிழ் கட்சியினருக்கும் நேரமும் பொறுமையும் இருக்குமா என்ன? இந்த உண்மை அவர்களும் அறியாதது அல்ல.

இருவரில், சுமந்திரன் பொது வேட்பாளர் என்ற கருத்துக்கு எதிரணிக்கு தலைமை தாங்குகிறார் என்றே கூறவேண்டும். ஆனால், மாவை சேனாதிராஜாவோ, அது விடயத்தில் எந்தவொரு முடிவும் எடுக்க விழைகிறவராகத் தெரியவில்லை. மாறாக, விக்னேஸ்வரன் தற்போது ரணிலை ஆதரிக்கும் நிலையில், பொது வேட்பாளராக தமிழ் அரசியல் தலைமைகள் தன்னை முன்னிறுத்தாதா, என்ற எண்ணம் அவருக்கு இருப்பதாகவே தோன்றுகிறது.

### புதிய வியூகம்

சரி, பொது வேட்பாளர் என்ற முடிவுக்கு தமிழ் அரசியல் கட்சிகள் ஒருமித்த ஆதரவு கொடுப்பதாகவே நினைத்துக்கொள்வோம். அப்போது, அந்த வேட்பாளர் யார், என்ற கேள்வி எழும். இதில், விக்னேஸ்வரன், அனந்தி சசிதரன், ஏன், மாவை உள்ளிட்டோர் தவிர, சிறிதரனும் செல்வமும்கூட தங்களை முன்னிறுத்தி அரசியல் செய்யமாட்டார்கள் என்று சொல்வதற்கு இல்லை.

இதில் வேட்பாளர் எவராயினும், அவர்கள் எந்தச் சின்னத்தில் போட்டியிடுவார்கள் என்பதும் கேள்விகுறியே. முதலில், தமிழ் அரசுக் கட்சியின் சின்னம்: 'வீடு'. அது வேண்டும்- வேண்டாம் என்று போட்டி போடும் பல்வேறு தரப்புகளுண்டு.

பின்னர், விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி. சின்னம் 'மீன்.

இந்த கட்சிகளுக்கும் சின்னங்களுக்கும் அப்பால், செல்வம் தலைமையிலான ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி. கூட்டமைப்பு உடைந்த பின்னர், அதில் அங்கத்துவ கட்சிகளான ரெலோ மற்றும் ப்ளொட் ஆகியவற்றோடு பழைய ஈபிஆர்எல்எப் போன்ற கட்சிகள் இணைந்து சமைத்த புதிய அவியல். அதன் சின்னம் 'குத்து விளக்கு'.

இந்த மூன்று சின்னங்களில் எதுவாகட்டும், அதனை அடையாளம் காட்டி தலைமை வகிக்கும் கட்சி, பொது வேட்பாளருக்கு கிடைத்த வாக்குகள் அனைத்துமே தங்களுக்குக் கிடைத்த வாக்குகள் என்ற வில்லங்கமான ஒரு புதிய விவாதத்தை தொடக்கி வைக்கும். காரணம், ஜனாதிபதித் தேர்தலைவிட, அதனைத் தொடர்ந்து வரும் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் புதிய வியூகம் படைக்க அவர்கள் இப்போதே தயாராகி விடுவார்கள். ஏன், உள்ளாட்சி தேர்தல்கள் குறித்தும் அவர்களது கருத்தும், கவனமும் கவலையும் இருக்கும்.

தனது கட்சி சின்னம் பொது வேட்பாளரின்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர்
Kalaikkathir

# யார் வேட்பாளர்? யார் சின்னம்?

4ம் பக்க தொடர்ச்சி...........

சின்னமாக தேர்ந்தெடுக்கப்படாவிட்டாலும், அடுத்த இரண்டு சின்னங்களும்கூட அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டுவிடக் கூடாது என்பதில் அனைவரும் கரிசனையாக காரியம் ஆற்றுவார்கள். அவர்களைப் பொறுத்தவரையில், பொதுவான, ஒரு சுயேச்சை சின்னத்தை கூட ஏற்றுக்கொள்வார்கள்.

### தனி இடம்

அந்த விதத்தில், ரெலோ கட்சி தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் அந்தர் பல்டி அரசியலில் தனக்கென ஒரு தனி இடம் முயன்று பெற்றுள்ளார். முதலில், சம்மந்தன் உயிருடன் இருக்கும் போதே கூட்டமைப்பின் இணைத் தலைவராகத் தன்னைதானே முன்னிறுத்திக் கொண்டார். கூட்டமைப்பில் இருந்து தமிழ் அரசு கட்சி வெளியேறி விட்டதாக சுமந்திரன், கட்சி தலைமை அமைப்புகள் முடிவெடுக்காத தனது முடிவை கட்சியின் முடிவாகத் திரித்தபோது, இல்லாத கூட்டமைப்பின் தலைவராக செல்வம் தன்னை முன்னிறுத்திக் கொண்டார்.

பின்னர், அவரே ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி உருவாவதற்கு முயற்சி மேற்கொண்டு, அதிலும் தன்னையே முதன்மையாகக் காட்டிக்கொண்டார். அதற்கு என்று தனியாக 'குத்து விளக்கு' சின்னத்தையும் பெற்றுக்கொண்டார். சொல்லப்போனால், திட்டமிட்டபடி, கடந்த வருடம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடந்திருந்தால். 'குத்து விளக்கு' சின்னத்தில் கேட்டு, வெற்றிபெற்ற வேட்பாளர்கள், வடக்கிலும் கிழக்கிலும் இப்போது இருந்திருப்பார்கள்.

அத்தகைய சூழலில், இல்லாத கூட்டமைப்பின் நாடாளுமன்ற தலைமைக்குத் தன்னை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று செல்வம் கோரி இருப்பாரா? காரணம், அப்போது அவர் மாத்திரம் அல்ல, புளொட் சித்தார்த்தன் உள்ளிட்ட தமிழ் அரசு கட்சியின் உறுப்பினரல்லாத நாடாளுமன்ற உறுப்பினர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்ற கேள்வி எழுந்திருக்கும். அவ்வாறு உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறாததாலேயே, செல்வம் இவ்வாறான கோரிக்கையை வைக்க முடிந்தது.

### என்ன கூறினார்?

தற்போதைய உடனடிப் பிரச்சினை, பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்த செல்வம், இரண்டு தினங்களுக்கு முன்னர் தன்னை மன்னாரில் சந்தித்து அளவளாவிய ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசாவிடம் என்ன கூறினார்? அல்லது, அவர் தம்மிடம் கூறியது குறித்த அவரது முடிவு என்ன?

செல்வம் மற்றும் ரெலோவின் பிற தலைவர்களை சந்தித்த பின்னர் பத்திரிகையாளர்களை சந்தித்த சஜித், பதிமூன்றாவது திருத்தம் சார்ந்த அரசியல் பகிர்வு திட்டத்தை தான் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டால் முழுமையாக செயல்படுத்துவதாக மூன்றாவது முறையாக தமிழ் மக்களுக்கு உறுதியளித்தார். அதில், பொலிஸ் அதிகாரமும் அடங்கும் என்பது அவர் சொல்லாமல் சொன்ன விடயம். அத்துடன் இந்திய மீனவர்களுடனான பிரச்சினைக்கும் முடிவு காண இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதில், பதிமூன்றை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்ற தமிழ் தலைமைகள் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு முன்பு எழுதிய கடிதத்திற்கு செல்வம் தலைமை வகித்து, முயற்சி எடுத்தார். ஆனால், வழக்கம் போலவே, சம்மந்தன் அவருக்கான அங்கீகாரத்தை தட்டி பறித்தார்.

அது பழைய கதை. தற்போது, செல்வம் வேண்டுவது என்ன? பொது வேட்பாளரா அல்லது சஜித்திற்கு ஆதரவா?

# இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் போக்குவரத்து பொலிஸார் கைது

திருகோணமலை வான் எல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் போக்குவரத்து பொலிஸார் ஒருவர் பணமாக இலஞ்சம் வாங்கும் போது கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் ரஜ எல, கந்தளாய் எனும் முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட (வயது 45) என்பவரே இலஞ்சம் ஊழல் தடுப்பு பிரிவு அதிகாரிகளால் புதன்கிழமை மாலை கைது செய்யப்பட்டார்.

மேற்படிசம்பவம்தொடர்பில்தெரியவருவதாவது-15.07.2024 ஆம் திகதியன்று மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவரை கடமை நேரத்தில் பரிசோதித்தபோதுஉரியஆவணங்கள்இன்மையால் இலஞ்சமாக ரூபா 10000.00 கேட்டிருந்தார் உடனடியாக ரூபா 5000.00 கொடுத்து விட்டு மீதி தொகை ரூபா 5000.00 பணத்தை புதன்கிழமை அன்று மாலை 7.20 மணிக்கு கொடுக்கும் போது இலஞ்ச ஊழல் தடுப்பு பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

குறித்த சந்தேக நபரை கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

# பல்வேறு திருட்டுக்களுடன் தொடர்புடைய 'மருதானை இம்ரான்' உட்பட மூவர் கைது

கொள்ளுப்பிட்டி மற்றும் கொம்பனி வீதி ஆகிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் பல்வேறு திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டசந்தேகநபர்களில்'மருதானை இம்ரான்' என்பவரும் 'ரெட்டி பனாவத்தை புத்தா' என்பவரும் அடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து, 15 இலட்சம் ரூபா பெறுமதியான6மடிக்கணினிகள், கணினிபாகங்கள், டெப் மற்றும் அதிக பெறுமதியான கைக்கிள் ஆகிய பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், கொள்ளுப்பிட்டி பகுதியில் உள்ள தனியார் பல்கலைக்கழகம் ஒன்றில் அத்துமீறி நுழைந்து கணினிகளை திருடியுள்ளதாகவும், வீடுகளினுள் நுழைந்துமடிக்கணினிகளைத்திருடியுள்ளதாகவும், கொம்பனி வீதியில் உள்ள பல்பொருள் விற்பனை நிலையம் ஒன்றிற்கு முன்பதாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான துவிச்சக்கர வண்டி ஒன்றைத் திருடியுள்ளதாகவும், ஏ.ரி.எம் அட்டைகளைத் திருடி பொருள்கள் கொள்வனவு செய்துள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகம் புதன் கிழமை கண்டிக்கு வருகை

## பணிப்பாளர் நாயகம் ஒட்ரே அசோலே கண்டிக்கு விஜயம்

யுனெஸ்கோவில் இலங்கை உறுப்புரிமை பெற்று 75 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு இலங்கைக்கு விஜயம் செய்துள்ள யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம் ஒட்ரே அசோலே புதன்கிழமை காலை கண்டிக்கு விஜயம் செய்தார்.

கண்டிக்கு சென்றுள்ள பணிப்பாளர் நாயகம், மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யு கமகேவால் வரவேற்கப்பட்டார்.

இங்கு குறுகிய விஜயத்தை மேற்கொண்ட பணிப்பாளர் நாயகம், ஸ்ரீதலதா மாளிகை, பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் தாவரவியல் பூங்கா போன்றவற்றுக்குச் சென்று அங்கு இடம்பெற்ற நிகழ்வுகளிலும் கலந்துகொள்ள உள்ளார். (05)




குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd





கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall

Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi






- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=

SPECIAL MENU PACKAGE

**BEVERAGES**

jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=




# பிள்ளை வளர்ப்பு

பொதுவாக நம் எண்ணங்களே செயலாகின்றது. செயலே பழக்கமாகின்றது. பழக்கமே வழக்கமாகின்றது. வழக்கமே ஒழுக்கமாகின்றது. தனி மனித ஒழுக்கமே பண்பாடு ஆகின்றது. பண்பட்ட குழந்தைகளை உருவாக்கும் பொறுப்பு பெற்றோர்களாகிய நம்மிடம்தான் இருக்கின்றது.

சில பெற்றோர்கள் பிள்ளை மீதுள்ள பிரியத்தில் அவர்கள் போக்கிலேயே விட்டுப் பிடிக்க நினைப்பதுண்டு. அதனால் பிள்ளைகளுக்கு ஒரேயடியாகச் செல்லம் கொடுத்து வளர்த்துவிட்டுப் பின்னர் சீரழிந்துபோக நேரிடும். எந்த வயதுக் குழந்தையையும் திட்டவோ அடிக்கவோ கூடாது. அதாவது உடல் ரீதியாகவோ மனரீதியாகவோ துன்புறுத்தக்கூடாது.

எந்தக் குழந்தையுடனும் உங்கள் குழந்தையைத் தொடர்புபடுத்திப் பேசாதீர்கள். அது உங்கள் குழந்தைக்கே மனதில் ஏக்கத்தையும் தாழ்வு மனப்பான்மையையும் விதைத்துவிடும். குழந்தைக்கு எதிரில் பெரியவர்கள் மரியாதைக் குறைவாகப் பேசக்கூடாது. எல்லோருடைய நல்ல குணங்கள் மட்டுமே குழந்தைகளுக்கு எதிரில் வெளிப்படுத்த வேண்டும். யாரையும் தாழ்த்திப் பேசக்கூடாது.

குழந்தைகளைப் பாராட்டுவது வெகுமதி வழங்குவது போன்றவை அவர்களைக் கெடுத்துவிடும் என்று நம்புவது தவறான ஒன்றாகும். பெரும்பாலும் குழந்தைகள் எதைச் செய்தாலும் அதை விமர்சிப்பதைக் காட்டிலும் நல்லவற்றை எடுத்துக்கூறலாம். குழந்தைகளுக்கும் விருந்தோம்பலைக் கற்றுத்தரவேண்டும். குழந்தைகளுக்கு உறவுகளின் அருமையையும் விட்டுக்கொடுத்தலையும் புரிய வைக்கவேண்டும்.

பிள்ளைகளின் வேலைகளை அவர்களே செய்யப் பழக்கவேண்டும். அவ்வாறு செய்தால் அவர்களுக்குப் பொறுப்புணர்ச்சி அதிகமாவதுடன் நமக்கும் வேலைப்பளு குறையும். அவர்கள் பெரியவர்களாக வளரும்போது மற்றவர்களின் உதவியை எதிர்பார்க்கவேண்டிய அவசியம் இருக்காது.

ஆபத்தை விளைவிக்கும் எந்தப் பொருளையும் குழந்தைகளின் கைக்கு எட்டும் தூரத்தில் வைக்கக்கூடாது. அதனால் ஏற்படும் ஆபத்தை அவர்களுக்கு விளக்குவது அவசியமாகும்.

பெற்றோர்கள் தமது குழந்தைகளுடன் முடிந்தளவு நேரம் செலவிடவேண்டும். குழந்தைகளோடு அமர்ந்து பேசவேண்டும். விளையாடவேண்டும். குடும்பத்தோடு அமர்ந்து பேசவேண்டும். குழந்தைகள் சொல்வதைக் காதுகொடுத்துக் கேட்கவேண்டும். பெற்றோர்கள் 'பிஸி'யாகிவிடுவதால் நிறையக் குழந்தைகள் கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து சிகரெட், பாக்கு, போதைப் பொருள் போன்ற பழக்கங்களுக்கு ஆளாகிறார்கள். மனதில் உள்ள பிரச்சினைகளை வெளியில் சொல்ல முடியாமல் மன உளைச்சலுக்கும் ஆளாகிறார்கள்.

குழந்தைகளைப் பெற்ற ஒவ்வொரு பெற்றோரது எதிர்பார்ப்பும் அதிகமாகவே இருக்கின்றது. தான் நினைக்கும்படிதான் தன் குழந்தை நடக்கவேண்டும், தான் சொல்வதைத்தான் குழந்தை கேட்கவேண்டும் என்பன போன்ற பல கட்டுப்பாடுகளை குழந்தைகள் மீது திணிப்பதை நாம் பார்த்திருப்போம். பெற்றோருக்கும் குழந்தைகளுக்கும் இடையே உள்ள உறவு மிகவும் தனித்துவமானதுஎன்றாலும்கூட அனைத்துக்குழந்தைகளும் ஒரே மாதிரி இருப்பதில்லை. அவர்கள் வாழும் சூழல் முற்றிலும் வேறுபட்டதாக இ-ருக்கும். இதனால் குழந்தைகள் எதிர்காலத்தில் ஆளுமை இல்லாதவர்களாக மாறுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உண்டு.

மேலே கண்ட வகையில் நீங்கள் எந்த வகைப் பெற்றோர் என்பதை நீங்களே தீர்மானித்துக்கொள்ளுங்கள். ''குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று'' என்ற பாடல் வரிகளை நாம் கேட்டிருப்போம். அதற்கேற்ப நாம் குழந்தைகளை வளர்க்கவேண்டும். முடிந்த அளவு உங்கள் குழந்தையை வருங்காலத்தில் ஆளுமைமிக்க நபர்களாக மாற்ற இப்போதே செயற்படுங்கள்.

**தெய்வேந்திரம் வஜிதா**

# மாவைக் கந்தன்

உக்கிரசிங்கன் என்ற கலிங்க அரசன் கதிரமலையை (கந்தரோடை) தலைநகராக கொண்டு ஆட்சி செய்த காலம்.

--

சோழ இளவரசி மாருதபுரவீகவல்லி தன் நோய் நீங்க தல யாத்திரை செய்து கொண்டிருந்தாள். அவளது நோய் நகுலேஸ்வர தரிசனத்தின் பின் மாறியதாம்.

--

இப்போது அவள் பேரழகி. அவளது அழகு பற்றிய பேச்சு உக்கிரசிங்க அரசன் காதை எட்டியது. நேரில் கண்டபோது காதல் பிறந்தது. கல்யாணம் நடந்தது. ஆனால், மாருதப்புரவீக வல்லியின் சில ஆசைகளை நிறைவேற்றும் பொறுப்பு அரசனைச் சேர்ந்தது.

--

அவளது விருப்பங்களில் முக்கியமானது கந்தவேளுக்கு பெருங்கோயில் அமைப்பது. விருப்பப்படி கோயில் எழுந்தது. அவள் சோழ தேச இளவரசி. ஆதலால் சோழ தேசத்திலிருந்து விக்கிரகங்கள் வந்தன.

--

அது மட்டுமல்ல, அவளது தந்தையான சோழ அரசன் தம் குல குரு மரபான தில்லை வாழுந்தண மரபில் பெரியமனதுளார் என்ற தீட்சிதரையும் குடும்பத்தோடு கோயிலுக்காக அனுப்பி வைத்தான்.

--

மாவிட்டபுரம் எழுந்தது. அங்கு ராஜா எழுப்பிய கோயில் ஆனி உத்தர நாளில் குடமுழுக்கு கண்டது. கோயில் நிர்வாகம் மற்றும் குருத்துவம் தீட்சித மரபினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

--

காலம் ஓடியது. அரசுகள் மாறின. காட்சிகள் மாறின. ஆனால் மாவை கந்தன் ஆட்சி இன்றும் நடக்கிறது. அதே பெரியமனதுளார் வம்சம் மாவை ஆதீனமாக இன்றும் திகழ்கிறது.

--

அத்தல ஷண்முகநாதன் மகோத்தர மகாரதத்தில் பவனி வருவதும் கண்டகி மகா சமுத்திரத்தில் தீர்த்தவாரி காண்பதும் காண வேண்டிய காட்சிகள்..

--

**மயூரகிரிக்குருக்கள்**



காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர்கள் வாழும் வடக்கு கிழக்கை தனி தேசமாக ஜனாதிபதி வேட்பாளர்கள் அங்கீகரிக்கவேண்டும்

## தேசிய கிறிஸ்தவ மன்றம் வலியுறுத்து

இலங்கையின் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் தமிழர்கள் வாழும் வடக்கு கிழக்குப் பகுதிகளை தனித்துமவமான தேசமாக அங்கீகரிக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் ஐக்கிய இலங்கைக்குள் குறிப்பிடத்தக்க சுயாட்சியையும், அதிகாரப்பகிர்வையும் வழுங்கவேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்துள்ளது.

இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளவை வருமாறு –

இந்த வருடம் பிற்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவேண்டியதன் அவசியத்தை உயர்நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளதை இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் வரவேற்கின்றது.

அடிப்படை உரிமைகள், வாக்களிப்பதற்கான உரிமைகள் உள்ளடங்கிய தங்கள் இறைமையை இலங்கை மக்கள் புத்திசாலித்தனதுடனும் பொறுப்புணர்வுடனும் பயன்படுத்தவேண்டும், என நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

இதற்கு நாடு எதிர்நோக்கியுள்ள அரசியல், பொருளாதார நெருக்கடிகள் குறித்து மக்களிற்கு தெரியப்படுத்துவதும், அவர்கள் அறிந்திருப்பது அவசியம்.

மேலும் அவர்கள்ஜனாதிபதி தேர்தல் அதன் பின்னர் இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் வேட்பாளர்களை விமர்சன அடிப்படையில் மதிப்பிடவேண்டும்.

இது அரசமைப்புரீதியான பலகட்சி ஜனநாயகத்தின் அத்தியாவசியமான அம்சமாகும்.

அனைத்து சமூகத்தினரையும் பாதித்துள்ள தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கான அடிப்படை காரணங்கள் அரசியல்ரீதியிலானவை என்பதை இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் பொதுமக்களிற்கு நினைவுபடுத்த விரும்புகின்றது.

நாட்டை கடந்த சில வருடங்களாக பாதித்துள்ள ,பொருளா தாரத்தை பிழையான விதத்தில் நிர்வகித்தமை, ஊழல்,பொருளாதார ரீதியில் எந்தவிதத்திலும் நியாயப்படுத்த முடியாததிட்டங்களிற்கானசெலவீனங்கள்,போன்றவைஅரசியல் அதிகாரத்தை அனுபவித்தவர்களை கட்டுப்படுத்துவதற்கான தடுப்பதற்கான உரிய ஏற்பாடுகள் இல்லாதமையால் ஏற்பட்ட விளைவுகளே.

வலுவான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கவேண்டும் என இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் மீண்டும் வேண்டுகோள் விடுக்கின்றது. ஒரு தனிநபர், பிரதிநிதித்துவம் செய்யும் கட்சி, தனிநபருக்கு, அப்பால் பாரிய அளவு அதிகாரம் தனிநபரிடம் குவிந்துள்ளமை அரசமைப்பு வாதம், ஜனநாயக நியமங்களை குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றது.

வல்லமைக்கு மேலான ஜனாதிபதிமுறை ஏனைய ஜனநாயக ஸ்தாபனங்களை செயல் இழக்கச்செய்கின்றது.

கடந்த காலங்களின் தொடர்ச்சியான ஜனாதிபதி தேர்தல்களில், அனேக வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரத்தின் போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதாக வாக்குறுதியளிப்பதையும்,ஆனால் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் இலகுவாக மறந்துவிடுவதையும் நாங்கள் அவதானித்துள்ளோம்.

குறிப்பிட்டகாலப்பகுதிக்குள்நிறைவேற்றுஅதிகாரமுறையை நீக்குவதுகுறித்துஅனைத்துஜனாதிபதிதேர்தல்வேட்பாளர்களும் தங்கள் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தவேண்டும்,பின்னர் அதிலிருந்து பின்வாங்காமல் நடைமுறைப்படுத்தவேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

நாட்டிற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற மிக முக்கியமான விடயங்கள் குறித்த தங்கள் நிலைப்பாட்டினை கொள்கைகளை வெளியிடவேண்டியது அனைத்து ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களிற்கும் முக்கியமான விடயமாகும்.

பொருளாதார நெருக்கடி , சட்டத்தின் ஆட்சி,போன்ற விடயங்கள் குறித்த தங்கள் நிலைப்பாட்டினை அவர்கள் முன்வைக்கவேண்டும்.

வடக்கு கிழக்கு தமிழ்மக்களின் நியாயபூர்வமான பிரச்சினைகளிற்கு தீர்வைக் காணமுடியாத நிலையில் இலங்கையின் தொடர்ச்சியான ஆட்சியாளர்கள் காணப்பட்டமையே யுத்தத்திற்கும்,நாட்டின் இனக்குழுக்கள் மத்தியில்ஏற்பட்ட துருவயமப்படுத்தலிற்கும் காரணம் என்பதை இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் பல வருடங்களாக தெரிவித்துவந்துள்ளது.

வடக்கு கிழக்கு தமிழ்மக்களின் அரசியல் ரீதியிலான பிரச்சினைகள், அவர்கள் எதிர்கொண்ட பாரபட்சங்கள் ,ஆகியவற்றைஉள்ளடக்கியஅடிப்படைபிரச்சினைகளிற்குதீர்வை காணக்கூடிய அரசியல்தீர்வின் மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வை காணமுடியும் என இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் உறுதியாக நம்புகின்றது.

அரசியல் தீர்வு என்பது ஐக்கியமான தேசம் என்ற கட்டமைப்பிற்குள், வடக்குகிழக்கை ஒரு தேசமாக கருதுவதுடன் ,குறிப்பிடத்தக்க சுயாட்சி, வடக்கு கிழக்கிற்கான அதிகாரப்பகிர்வு ஆகியவற்றை உள்ளடக்கியதாக காணப்படவேண்டும்

மலையகமக்களின்நியாயபூர்வமான அபிலாசைகளிற்கும் தீர்வை காண்பது அவசியம்.அவர்கள் பல தசாப்தங்களாக கௌரவமும் ஏனைய மனித உரிமைகளும் பறிக்கப்பட்ட சமூகமாக காணப்படுகின்றனர்.

இனமோதல் மற்றும்யுத்தத்தின் விளைவுகளிற்கு பதிலளிப்பதற்கான நியாயபூர்வமான முயற்சிகள் இடம்பெறவேண்டும்.பலவந்தமாக காணாமலாக்கப்பட்டமை, அரசியல் கைதிகளிற்கான நீதி,படுகொலைகள் இடம்பெற்றதை ஏற்றுக்கொள்ளுதல்,பாலியல் வன்முறைகள் ஏனைய பாரிய யுத்தகால அநீதிகள் போன்றவை இனமோதல் மற்றும் யுத்தத்தின் விளைவுகள்.

மேலும் இது படையினராலும் பல அரச நிறுவனங்களாலும் முன்னெடுக்கப்படும் நில அபகரிப்புகள் , யுத்தத்தினால் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதை தடுத்தல், குழப்புதல் , கட்டுப்படுத்தல் , அச்சுறுத்தல் மற்றும் மாற்றுக்கருத்தினை ஒடுக்குதல்,போன்றவற்றைஉள்ளடக்கியதாககாணப்படுகின்றது.

ஆகவே நீண்டகாலமாக நீடிக்கும் இனமோதலிற்கு – யுத்தம் முடிவடைந்து 15 வருடங்களான பின்னரும் தீர்வு காணப்படாமலிருக்கும் இனமோதலிற்கு தீர்வைக் காண்பதற்கு நிரந்தரமான முடிவை காண்பதற்கான தங்கள் கொள்கைகளை அனைத்து வேட்பாளர்களும் தெளிவாக முன்வைக்கவேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம். – என்றுள்ளது.(05)

---

### ராஜபக்சக்களின்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்பில் திருத்தம் செய்யும் வகையில் சட்ட வரைவு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தத் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மக்கள் வாக்கெடுப்புக்கும் செல்ல நேரிடும். ஜனாதிபதித் தேர்தலுக்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதி தேர்தலுடன் தொடர்புடைய ஒரு விவகாரத்துக்கு மக்கள் வாக்கெடுப்புக்குச் செல்லும்போது ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்படும்.

ராஜபக்சக்கள் ஒத்துழைப்பு வழங்கும் ஜனாதிபதி வேட்பாளருக்கு நாங்கள் ஆதரவு வழங்கப் போவதில்லை, ஏனெனில் ராஜபக்சக்கள்தான் இந்த நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளினார்கள். 2042 ஆம் ஆண்டுவரை நாடு கடன் செலுத்த வேண்டியள்ளது. இந்த நிலைமையை ராஜபக்சக்கள்தான் தோற்றுவித்தார்கள்.

அதேபோல் பொருளாதார படுகொலையாளிகள், பெற்றோலிய கூட்டுத்தாபனத்தை கொள்ளையடித்தவர்கள், உர இறக்குமதியை தடைசெய்து விவசாயத்தை நிர்மூலமாக்கியவர்கள்,மருந்துகட்டமைப்பை இல்லாதொழித்தவர்கள் உட்பட அனைத்து குற்றச் செயல்களிலும் ஈடுபட்டவர்களுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்டு அவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும். இதற்கான யோசனைகளை நாங்கள் எமது கொள்கைத்திட்டத்தில் முன்வைத்துள்ளோம். இவற்றை செயற்படுத்துவதாக உறுதியளிப்பவர்களுக்கு ஆதரவு வழங்குவோம் என்றார்.

### புலிகள்கூட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுத்துறை மாவட்டத்துக்கான ஜயகமு சிறீலங்கா மக்கள் நடமாடும் சேவையின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று மத்துகம பொது விளையாட்டரங்கில் அமைச்சர் தலைமையில் நடைபெற்றது. அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் விடுதலைப் புலிகளால் 30 வருடங்களாக போர் இடம்பெற்ற போதும் பாடசாலைகளை மூட அனுமதிக்கவில்லை. ஆசிரியர்கள் பதுங்கு குழிகளை வெட்டி பீப்பாய்களுக்குள் வைத்து குழந்தைகளுக்கு கற்பித்தார்கள்.

தற்போதைய சூழலில் ஆசிரியர்களாகவும் தெய்வங்களாகவும் கருதப்பட்ட ஆசிரியர்களின் கௌரமும் மரியாதையும் கெட்டுவிட்டது. பாடசாலைக்குச் சென்றிடாத இலங்கை ஆசிரியர் சங்க தலைவர் ஸ்டாலின், மஹிந்த ஜயசிங்கவின் அரசியல் நலன்களுக்காக கௌரவமான அதிபர்களையும் ஆசிரியர்களையும் பயன்படுத்தி இலவசக் கல்விக்கு பெரும் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். நாட்டில் 10,000 பாடசாலைகளை மூடியதுதான் இவர்களின் செயற்திறமையாகும் .

இன்று நாங்கள் நிற, கட்சி வேறுபாடின்றி ஒரே அரசில் இணைந்து செயற்படுகின்றோம் அவ்வாறே இன்று அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் அரசியல் பற்றி சிந்திக்காமல் ஒன்றிணைந்துள்ளனர். நாட்டையும் வீழ்ந்த நாட்டையும் மீண்டும் கட்டியெழுப்புவதற்கு முழு நாட்டு மக்களும் பாரிய இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர் அன்றே அந்தக் கொள்கைகளை மாற்றிய பிறகு, கொரியா மீண்டும் சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்லாத நாடாக முன் வந்தது.

இன்று இலங்கையின் அந்தப் பயணமும் ஆரம்பமாகிவிட்டது. எங்களுக்கு கட்சி அரசியல், இனம், மதம், சாதி, நிறம் எதுவும் வேண்டாம். நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும் என்ற கருத்துக்கு நாடு வந்துள்ளது ஆனால் இன்று இந்த மக்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தம்மைத் தியாகம் செய்து, சிரேஷ்ட அமைச்சர்கள் தமது அமைச்சுக்களைக் கூட தியாகம் செய்து, நாட்டுக்காக அனைவரும் ஒன்றிணைந்த ஒரு பயணமாகும்.

புலம்பெயர்ந்த தொழிலாளிகள் பன்னிரண்டு பில்லியன் அமெரிக்கா டொலர்களை நாட்டுக்கு அனுப்பி வைத்து வீழ்ந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப ஒரு பெரும் பங்களிப்பை செய்தார்கள். இவ்வாறு நாட்டுக்கு பங்களிப்பு செய்துள்ள புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடையே 100,000 தொழில்முனைவோரை நாம் உருவாக்குவோம். அதற்கான வாய்ப்பு தற்போது எமக்கு கிடைத்துள்ளது அதாவது எமது நாட்டில் முதலீடு செய்ய கொரியா, ஜப்பான், இஸ்ரேல், மத்திய கிழக்கு மற்றும் துபாய் ஆகிய நாடுகளில் இருந்து தொழில் முனைவோர் வந்துள்ளனர் என்றார்.

### பகிரங்க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த இரண்டு வருடங்களில் செய்த சாதகமான விடயங்கள் மூலம் நாட்டை சரியான பாதைக்கு கொண்டு வர முடிந்தது. இது தொடர்பாக எதிர்மறையான கருத்துக்களை முன்வைக்கும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பொருளாதார ஆய்வு நிறுவனங்களின் நிபுணர்களையும் பொதுமேடையில் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு அழைப்பு விடுக்கிறேன்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்காக ஜனாதிபதி மேற்கொண்டுள்ள சாதகமான நடவடிக்கைகளை விரிவாக தெளிவுபடுத்த நிதி இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் நான் தயாராக உள்ளேன் – என்றார்.

அத்தோடு, கடன் உத்தரவாத நிறுவனம் ஒன்றின் தேவை காணப்படுகிறது. எதிர்வரும் ஒக்டோபரில் கடன் உத்தரவாத நிறுவனம் ஆரம்பிக்கப்படவுள்ளது. கடனுக்கான பிணையொன்றை வைக்க முடியாத வேளையில் கடன் உத்தரவாத நிறுவனம் அதற்கான உதவிகளை வழங்கும்.

அத்துடன் வாகன இறக்குமதி நிறுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்துத் துறைகள் தொடர்பிலும் ஆராய விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் முதல் அமர்வு ஜூலை முதல் வாரத்தில் நடைபெற்றது. இதன்படி ஒகஸ்ட் மாதம் இரண்டாவது வாரத்தில் அமைச்சரவையில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

பின்னர் வாகனங்களை எப்படி இறக்குமதி செய்வது என்பது குறித்து முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படும். அத்துடன், சுங்க பரிசோதகர்கள் ஆட்சேர்ப்புக்கான பரீட்சை முடிவுகள் தற்போது வெளியாகியுள்ளன. நேர்முகப் பரீட்சை ஜூலை 26 – 27 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது. மேலும் உதவிசுங்க அத்தியட்சகர்களுக்கான ஆட்சேர்ப்பு முடிவுகள் இந்த வாரம் வெளியாகும். இந்த ஆட்சேர்ப்பு வெளிப்படைத் தன்மையுடன் நடைபெறுகிறது என்றார்.

### அடுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதாரணமாக ஜூலை மாதம் 17ஆம் திகதி எமக்கான அதிகாரம் கிடைத்தாலும் செப்டெம்பர் 17ஆம் திகதிக்குப் பின்னர் தான் நாம் வாக்கெடுப்பினை நடத்த முடியும். அந்த வகையில் செப்டெம்பர் 17ஆம் திகதி தேர்தலை அறிவிக்க முடியாது. ஏனென்றால் அன்றையதினம் ஒரு பூரணை தினமாகும்.

பூரணை தினத்தில் தேர்தலை நடத்தமுடியாது. மறுதினமான 18ஆம் திகதியும் தேர்தலை நடத்த முடியாது. விகாரைகளை வாக்குச்சாவடிகள் அமைப்பதற்காக பயன்படுத்துகின்றோம். பூரணை தினத்தில் வழிபாடுகள் நிறைவடைந்ததன் பின்னர் வாக்குச்சாவடிகளை அமைக்க முடியாது.

அதிகாரகளுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவதில் பிரச்சினைகள் உள்ளன. அந்த வகையில் 18ஆம் திகதிக்குப் பின்னரான காலத்தில் மிகவும் அண்மித்த திகதியை அறிவித்து தேர்தலை நடத்துவோம் என்று பொறுப்புடன்கூறுகின்றேன்என்றார்.

### ஜப்பானின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளை எட்டியதன் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமைத்துவத்தின் மீது சர்வதேச சமூகம் கொண்டுள்ள நம்பிக்கையே பிரதிபலிக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை வருகை தந்துள்ள வீடமைப்பு, நிர்மாண மற்றும் நகர்ப்புறத் துறைகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஜப்பானிய உயர்மட்டக் குழு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்தது.

இலங்கையில் உத்தியோக பூர்வ அபிவிருத்தி உதவியின் கீழ் ஜப்பானினால் நடைமுறைப் படுத்தப்பட்ட திட்டங்களை மீள ஆரம்பிப்பது மற்றும் இலங்கையில் புதிய முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பிலும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இலங்கை அடைந்துள்ள பொருளாதார முன்னேற்றம் குறித்தும் சர்வதேச நாணய நிதியத்துடன் செயற்பட்டு உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவுடன் இணைந்து மிகக் குறுகிய காலத்தில் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்டமை தொடர்பிலும் ஜப்பான் பிரதிநிதிகள் ஜனாதிபதிக்கு தமது பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

கடன் மறுசீரமைப்புச் செயற்பாட்டின்போது கடன் வழங்குநர்களுடன் கலந்துரையாடல்களை நடாத்துவதற்கு ஜப்பான், இலங்கைக்கு வழங்கிய ஆதரவை நன்றியுடன் நினைவு கூர்ந்த ஜனாதிபதி, கல்வி, விவசாய நவீனமயமாக்கல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்தி நெருக்கமான உறவுகளை ஏற்படுத்துவதற்கு இலங்கை அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் தெரிவித்தார். அதற்காக தற்போதைக்கு நிறுத்தப்பட்டுள்ள ஜப்பானிய ஒத்துழைப்பின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களை மீள ஆரம்பிப்பது முக்கியம் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கொழும்புகப்பல்துறை இலங்கைக்கு பெறுமதிமிக்க நிறுவனமாக இருப்பதால் அதனை தொடர்ந்தும் முன்னெடுப்பதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தித் திட்டம், கொழும்பு துறைமுக கிழக்கு இறங்குதுறை அபிவிருத்தித் திட்டம், மத்திய அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணம் மற்றும் தொலைக்காட்சி டிஜிட்டல் ஒளிபரப்புத் திட்டம் ஆகியவற்றை உடனடியாக மீள ஆரம்பிக்க முடியும் என ஜப்பானிய பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

கடந்த ஆட்சியில் இடைநடுவில் நிறுத்தப்பட்ட இலகு ரயில் திட்டத்தை மீள ஆரம்பிக்கும் சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக குறிப்பிட்ட ஜப்பானிய பிரதிநிதிகள்,

தொடர்ச்சி 9ம் பக்கம்....

## ஜப்பானின்....

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லதொரு திட்டத்தை மீள அமுல்படுத்துவதற்கான சாத்தியம் இருப்பதாக தெரிவித்ததோடு, கொழும்பு நகரின் போக்குவரத்து நெரிசலைக்குறைப்பதற்கானசிறந்த திட்டமான இலகு ரயில் திட்டத்தை மீள ஆரம்பிப்பதற்கு சாத்தியமாக உள்ள இடங்கள் குறித்து ஆராய நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டனர்.

குறைந்த வருமானம் பெறுவோருக்கு வீட்டுவசதி மற்றும் பிற நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதில் அரச -தனியார் கூட்டு முயற்சியின் (ஊணஊண) முக்கியத்துவத்தை இரு தரப்பினரும் வலியுறுத்தினர். இலங்கை அரசாங்கம் அதன் கொள்கைகள் மற்றும் சர்வதேச உடன்படிக்கைகளுக்கு இணங்க சுற்றாடல்நட்புதிட்டங்கள்மற்றும்புதுப்பிக்கத்தக்க ஆற்றலை ஊக்குவிப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் இந்த கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது.

ஜப்பானில்மின்சார விநியோகத் துறையை மேம்படுத்தும் நோக்கில் ஜப்பானில் தனியார் துறையிலுள்ள தொழில் வாய்ப்புகளுக்காக தொழில்நுட்பத்துறையில்இலங்கை பட்டதாரிகளைவேலைக்குஅமர்த்தத் தயாராக இருப்பதாக ஜப்பானிய பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

மேலும், கார்பன் வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்காக மேம்பட்ட ஜப்பானிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதிட்டங்களைஉள்ளடக்கிய கூட்டுகார்பன்குறைப்புபொறிமுறை குறித்து ஜப்பானிய பிரதிநிதிகள் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

# தமிழ் மக்கள் ஒற்றுமையாகவுள்ளோம் என்பதை உலகிற்குக் காட்டவே தமிழ் பொது வேட்பாளர்

## சித்தார்த்தன் எம்.பியின் விளக்கம் இது



தமிழ் மக்கள் ஒற்றுமையாக இருக்கின்றோம் என்பதை உலகிற்கு காட்டுவது தான் எங்களது விருப்பம். அது தான் பொது வேட்பாளர் விடயம் என புளொட் அமைப்பின் தலைவரும் யாழ். மாவட்ட நடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

புளொட் அமைப்பின் தலைவர் காலமாகி 38 வருடங்கள் முடிந்து விட்டது. இந்த 38 வருடங்களுக்குள் ஆயுதப் போராட்டம் ஒரு முடிவுக்கு வந்திருந்தாலும் கூட என்ன காரணத்திற்காக முதலில் சாத்வீகமாகவும் பின்பு ஆயுதப் போராட்டமாகவும் தமிழ் மக்களால் தொடங்கப்பட்டதோ அந்த காரணம் இன்றும் இம்மியளவும் மாறாது அப்படியே இருகிறது.

மாறாமல் இருப்பதைக் காட்டிலும் இந்த நாட்டில் எம்மவர்களின் தொகை இன்னும் குறைந்து வருவதை பார்க்கக் கூடியதாகவுள்ளது.

சகல வழிகளிலும் தமிழ் மக்கள் மிகப் பெரிய பின்னடைவை சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். பொருளாதாரம், அரசியல், கல்வி, எண்ணிக்கை என அது நீண்டு செல்கிறது. அண்மைக் காலமாக இந்தியா, கனடா, ஆஸ்ரேலியா என பல நாடுகளுக்கு அதிகளவில் செல்கிறார்கள். 15 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் குடிபுகுந்துள்ளார்கள். இந்த நிலை தொடர்ந்து கொண்டு இருக்கிறது. இந்த நிலை தமிழ் மக்களை பின்னடைவுக்கும், படுபாதாளத்திற்கும் கொண்டு செல்லும்.

தனிப்பட்டவாழ்க்கையில்அவர்கள்வெளிநாடு செல்வது சரி. அது அவர்களுடைய விருப்பம். ஆனாலும் ஓர் இனமாக பார்க்கின்ற போது மிகவும் பின்னடைவு. ஆனாலும் வெளிநாடுகளில் உள்ள எங்களது உறவுகள் எங்களுக்கு ஓர் உந்து சக்தியாக, பலமாக இருக்கிறார்கள்.

போச்சு என்று வருகின்ற போது ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க கூட புலம்பெயர் தமிழ் மக்களுடன் பேச வேண்டும் எனச் சொல்கிறார். அவர்களிடம் இருக்கக் கூடிய அந்த பொருளாதார பலத்தைஇங்குகொண்டுவரலாம்எனசிந்திக்கிறார். அது பற்றி எம்முடன் கதைக்கின்றார். ஆனாலும் தொடர்ந்து வருகின்ற எந்தவொரு அரசாங்கமும் தமிழ் மக்களுக்கு நியாயமான ஒரு தீர்வைக் கொடுக்கத் தயாரில்லை.

எங்களதுஇயக்கம்உட்படஎல்லாஇயங்களிலும் இருந்தும் ஆயிரம் ஆயிரம் போராளிகள் தலைவர்கள் ஏன் மடிந்தார்களோ அதற்கான காரணம் இன்றும் இருகின்றது.

தமிழ் மக்கள் ஒற்றுமையாக இருக்கின்றோம் என்பதை உலகிற்கு காட்டுவது தான் எங்களது விருப்பம். அது தான் பொது வேட்பாளர் விடயம். மக்களில் பலர் அதை விரும்புகிறார்கள். சிலர் விரும்பவில்லை. சிலர் இது ஒரு விசப்பரீட்சையாக இருக்கும் என்கிறார்கள். சில வேளைகளில் நாம் விரும்பக்கூடியவாக்குளைகொண்டிருக்காவிட்டால் அது பாதிக்கும் என நினைக்கிறார்கள். கட்சிகள் ஒற்றுமையாக இருக்கின்றன. மக்கள், கட்சிகள் ஒற்றுமையாக சொல்வதை கேட்கிறார்கள் என வெளிநாடுகள் நம்பும் நிலை வரும். ஒற்றுமையை காட்ட வேண்டும்.

இந்த விடயம் தொடர்பில் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் சேனாதிராசா கூட அதன் முக்கியத்துவம் தொடர்பில் கூறியுள்ளார். புதிதாக தெரிவு செய்யப்படட தலைவர் சிறிதரன் கூட அது சரியென சொல்லியுள்ளார். இப்படியாக தமிழரசுக் கட்சியில் இருக்கக் கூடிய பலர் ஒத்துக் கொள்கிறார்கள்.

இப்படியாக எல்லோருமாக ஒற்றுமையாக வரக் கூடிய ஒரு நிலையில் நாம் எமது பலத்தைக் காட்டக் கூடியதாக இருக்கும். ஒற்றுமையை காட்டுவதன் மூலம் நாம் உலக நாடுகளிடையே எமது சரியான நிலைப்பாட்டை காட்டக் கூடியதாக இருக்கும். அதற்காகவே இந்த முயற்சியை செய்கிறோம் எனத் தெரிவித்தார். (05)



## போதை மாத்திரைகளுடன் அண்ணன், தம்பி கைது

### திருகோணமலையில் சம்பவம்

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்போபுர பகுதியில் போதை மாத்திரைகளுடன் அண்ணன், தம்பி என இருவர் சர்தாபுர விசேட அதிரடிப்படையினரால் புதன்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என உப்புவெளி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைதானவர்கள் 26, 28 ஆகிய வயதுகளையுடைய அண்ணன், தம்பி என பொலிஸார் தெரிவித்தனர். இவர்களிடமிருந்து 362 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இரண்டு சந்தேக நபர்களையும் திருகோணமலை நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் உப்புவெளி பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (05)

## கிரிக்கெட் வீரர் கொலை; சந்தேகநபர் கைதானார்

இலங்கையின் 19 வயதுக் குட்பட்டோருக்கான கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் தம்மிக்க நிரோசன சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இதனை தெரிவித்தார்.

இலங்கையின் 19 வயதுக் குட்பட்டோருக்கான கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் தம்மிக்க நிரோசன கடந்த 16 ஆம் திகதி அம்பலாங்கொட கந்தெவத்தை பகுதியில் வைத்து சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் போது மூன்று சந்தேக நபர்கள் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சூதாட்டத்தின் போது ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் மேலும் தெரிவித்தார். (05)

## போதைப்பொருளுடன் ஐவர் மெல்சிறிபுர பகுதியில் கைது

குருணாகல், மெல்சிறிபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் பெண் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என மெல்சிறிபுர பொலிஸார் தெரிவித்தனர்.

மெல்சிறிபுர பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த மூன்று முச்சக்கரவண்டிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொரள்ளை, பன்லியத்த மற்றும் தம்புள்ளை ஆகிய பகுதிகளில் வசிக்கும் 20, 23, 27 மற்றும் 29 வயதுடைய நான்கு நபர்களும் பொரள்ளை பகுதியில் வசிக்கும் 19 வயதுடைய பெண்ணொருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 49 கிராம் 1,350 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மெல்சிறிபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



காலைக்கதிர்
Kalaikkathir

# மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் 16ஆவது நாளாகவும் கவன ஈர்ப்புப் போராட்டம்



மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் 16 ஆவது நாளாகவும் புதன்கிழமை மட்டக்களப்பு நகரில் தமது கவன ஈர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஒன்றுகூடிய பட்டதாரிகள் புதன்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது தொழில் உரிமையை உறுதிப்படுத்துமாறு கோரி மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தால் இந்தப் போராட்டம் தொடர்ச்சியான முறையில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

வயது ஏறுகிறது வாழ்க்கை போகுது வேலை வேண்டும், நாம் கண்ட கனவு பொய்யாகி விடுமோ, பட்டம் வீட்டில் நாங்கள் றோட்டில் போன்ற பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமது போராட்டம் 16 ஆவது நாளை கடந்துள்ள போதிலும் இதுவரையில் தமக்கு சாதகமான எந்த பதிலும் வழங்கப்படாத நிலையில் தாங்கள் தொடர்ச்சியாக புறக்கணிக்கப்படுவதாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர். (05)

# நண்பிக்கு பணம் கொடுத்து ஏமாந்தவர் உயிர் மாய்ப்பு

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

தனது நண்பிக்காக வங்கியில் இருந்து கடனாக பெற்று கொடுத்த பணத்தினை மீள பெறமுடியாமையினால் மன முடைந்த குடும்ப பெண் தனது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணம், அல்வாய் பகுதியை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயே உயிரிழந்துள்ளார்.

உறவு முறையான இரு பெண்களுக்கு இடையில் நீண்ட கால நட்பு இருந்து வந்துள்ளது. அதில் ஒரு பெண் பணகஷ்டத்தில் இருந்த போது மற்றைய பெண் வங்கியில் பெருந்தொகை பணத்தினை கடனாக பெற்று, தனது நண்பிக்கு பண உதவி செய்துள்ளார்.

பண உதவியை பெற்றுக்கொண்ட பெண், பணத்தினை மீள செலுத்தாத நிலையில், வங்கியில் கடன் பெற்ற பெண் பண நெருக்கடிக்குள்ளாகி, மனவுளைச்சலில் காணப்பட்டுள்ளார்.

இந்நிலையில் நண்பியின் பெயரை முகநூலில் பதிவிட்டு, தனது மரணத்திற்கு காரணம் இவர் தான் என்றும் இவரால் தான் தனது மூன்று பிள்ளைகளையும் அநாதையாக விட்டு செல்வதாக பதிவிட்டு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார். (05)

# மண்வெட்டியால் தாக்கப்பட்டு மாத்தளையில் ஒருவர் கொலை

## சந்தேக நபர் கைது

மாத்தளையில் மஹவெல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மில்லவான பகுதியில் மண்வெட்டியால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக மஹவெல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

மில்லவான, பஹலகம பகுதியில் வசிக்கும் 46 வயதுடைய நபரொருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்டவர் தனது காணியில் வேலை செய்து கொண்டிருக்கும் போது அருகில் உள்ள மற்றுமொரு காணியொன்றின் உரிமையாளருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது, இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறி இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, தாக்குதலை மேற்கொண்டதாக கூறப்படும் 55 வயதுடைய சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்டவரது சடலம் மாத்தளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பல்வேறு திருட்டுக்களுடன் தொடர்புடைய 'மருதானை இம்ரான்' உட்பட மூவர் கைது

கொள்ளுப்பிட்டி மற்றும் கொம்பனி வீதி ஆகிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் பல்வேறு திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் 'மருதானை இம்ரான்' என்பவரும் 'ரெட்டி பனாவத்தை புத்தா' என்பவரும் அடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து, 15 இலட்சம் ரூபா பெறுமதியான 6 மடிக்கணினிகள், கணினி பாகங்கள், டெப் மற்றும் அதிக பெறுமதியான கைக்கிள் ஆகிய பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள், கொள்ளுப்பிட்டி பகுதியில் உள்ள தனியார் பல்கலைக்கழகம் ஒன்றில் அத்துமீறி நுழைந்து கணினிகளை திருடியுள்ளதாகவும், வீடுகளினுள் நுழைந்து மடிக்கணினிகளைத் திருடியுள்ளதாகவும், கொம்பனி வீதியில் உள்ள பல்பொருள் விற்பனை நிலையம் ஒன்றிற்கு முன்பதாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான துவிச்சக்கர வண்டி ஒன்றைத் திருடியுள்ளதாகவும், ஏ.ரி.எம் அட்டைகளைத் திருடி பொருள்கள் கொள்வனவு செய்துள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# புத்தளத்தில் ஒரு தொகை உலர்ந்த மஞ்சள் மீட்பு




நாட்டிற்கு சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 778 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

புத்தளம் வெள்ளமுண்டலம தொடக்கம் கொலங்கனத்த வரையான கடற்கரைப் பகுதியில் நேற்று (வியாழக்கிழமை) மாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடடிவடிக்கையின் போது இந்த உலர்ந்த மஞ்சள் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் வரை உலர் மஞ்சள் பொதி கடற்படையினரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளது. (05)

# கிளிநொச்சி கரைச்சி சாந்தபுரம் கிராமத்தில் மின்சார வசதியின்றி 10 குடும்பங்கள் அவதி





கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சாந்தபுரம் கிராமத்தில் சுமார் 10இற்கு மேற்பட்ட குடும்பங்கள் மின்சாரம், நீர் தேவையை பூர்த்தி செய்து தரப்படவிடவில்லை என குறிப்பிடுகின்றனர்.

12 ஆம் வீதியில் உள்ள மக்களில் 8 குடும்பங்கள் அடுத்தடுத்து வாழ்ந்து வரும் நிலையில் இவ்வாறு அடிப்படை வசதிகள் தொடர்பில் கவலை தெரிவிக்கின்றனர்.

மின்சாரம் பெறுவதற்கு மின்கம்பங்கள் நாட்ட மின்சார சபையினர் கம்பத்துக்கான பணம் அறவிடப்படும் என கூறியுள்ளனர் எனவும், அவ்வளவு பெரும் தொகை பணம் தம்மிடம் இல்லை எனவும் மக்கள் கூறுகின்றனர்.

யானை, கரடி உள்ளிட்ட காட்டு விலங்குகளின் அச்சுறுத்தல் காணப்படும் நிலையில் மின்சாரம் இல்லாமையால் பிள்ளைகளின் கல்வியும் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

நீரையும் பணம் கொடுத்து வாங்கவேண்டி உள்ளதாகவும், வீட்டுத் திட்டம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளும் தமக்கு கிடைக்கவில்லை எனவும் கவலை தெரிவிக்கின்றனர்.

மிகவும் வறுமையில் வாழும் அப்பகுதி மக்கள் தமது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து தருமாறு கோரிக்கை முன்வைக்கின்றனர். (05 - 113)



# புதிய மீன்பிடி சட்டத்திற்கு எதிராகச் சுவரொட்டிகள்



அரசால் உருவாக்கப்பட்ட புதிய மீனவச் சட்ட வரைவிற்கெதிராக புதன்கிழமை மன்னார் நகர பகுதியில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

மீனவ அமைப்புக்களின் ஒன்றியம் எனும் பெயரில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்ட இளைஞர் அமைப்பினரால் குறித்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

மேற்படி சுவரொட்டியில் மீன்பிடி தொழிலை நம்பி வாழும் அனைவரினதும் வயிற்றில் அடிக்கும் புதிய மீன்பிடி சட்டத்தை தோற்கடிப்போம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# வடமாகாண சுகாதார துறையிலுள்ள ஆளணிப் பற்றாக்குறையை தீர்க்குக

## சுகாதார அமைச்சரிடம் ஆளுநர் கோரிக்கை



வட மாகாண சுகாதார துறையில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறைக்கான தீர்வுகளை வழங்குமாறு சுகாதார அமைச்சரிடம், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ல்ஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண சுகாதாரத்துறை தொடர்பான விசேட கலந்துரையாடல் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது.

வடக்குமாகாணபிரதமசெயலாளர்செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மத்திய சுகாதார அமைச்சின்செயலாளர்வைத்தியர்மஹிபால, வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

அத்துடன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், விசேட வைத்தியர்கள் உள்ளிட்ட பலரும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்த விசேட கூட்டத்தில் உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர் அவர்கள் -

சுகாதார மற்றும் கல்வித் துறைகளே நாட்டில் மிகவும் சிக்கல் வாய்ந்தவைகளாக காணப்படுகின்றன. இந்த இரண்டு துறைகளிலும் மிகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்றனர். எனினும் மாகாணத்தைப் பொறுத்தவரையில் எங்களுக்கு பல சவால்கள் காணப்படுகின்றன. வளப்பற்றாக்குறைகாணப்படுவதுடன், எங்கள்மீதான குற்றச்சாட்டுக்களும் காணப்படுகின்றன. சுகாதார துறையில் பல விடயங்களை மேம்படுத்த வேண்டிய தேவைகாணப்படுகின்றது. நோய் தடுப்புக்களை மேற்கொள்வதுடன்நோயாளர்களின்உரிமைகளைப் பாதுகாக்குமாறே எனது அதிகாரிகளுக்கு நான் கூறி வருகின்றேன்.

வரையறுக்கப்பட்ட வளங்களை பயன்படுத்தி சிறந்த சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன. மாகாண சுகாதார துறையை மேம்படுத்துவது தொடர்பில் எனது அதிகாரிகளுடன் தொடர்ந்து கலந்துரையாடி வருகின்றேன். அத்துடன் ஜனாதிபதி அவர்களால் நான்கு வைத்தியசாலைகளில் திறந்துவைக்கப்பட்ட விசேட பிரிவுகளிலும் வளங்களை பகிர்ந்து பயன்படுத்துவது தொடர்பில் ஆராயப்படுகிறது.

முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் காணப்படும் வைத்தியசாலைகளின் குறைபாடுகள் தொடர்பில் அறிந்துள்ளோம். குறித்த வைத்தியசாலைகள் தொடர்பான முன்மொழிவுகள் தயார் செய்யப்பட்டு இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளன. மக்களை பாதுகாப்பதற்கான அதிகபட்ச முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிலையில் மாகாண சுகாதார துறையில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறைக்குத் தீர்வுகளை வழங்குமாறு அமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்தேன். இந்த விடயம் தொடர்பில் விரைவில் தீர்வுகளை பெற்றுத்தருவதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார். - எனத் தெரிவித்தார்.(05)



# கிண்ணியா கடற்கரையில் பெண்ணின் சடலம் மீட்பு



கிண்ணியாபொலிஸ்பிரிவுக்குட்பட்ட தோனாகடற்கரையில், ஒருபெண்ணின் சடலம் நேற்று (புதன்கிழமை) காலை மீட்கப்பட்டுள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர்கிண்ணியா அஹமட் லேன் வீதியைச் சேர்ந்த, 33 வயதான மஹ்ரூப் முன்னவ்வரா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார் எனப் பொலீஸார்தெரிவித் தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் புத்தி சுவாதீனமற்றவர் எனவும் கடலில் குளிப்பதற்காக நேற்று (புதன்கிழமை) காலை கடலில் இறங்கியதால் இச் சம்பவம் இடம் பெற் றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரனை மூலம் தெரியவருகிறது.

குறித்த சடலத்தை விசாரனைகளின்பின்னர் உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளதாகவும் கிண்ணியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை கிண்ணியா பொலீஸார் முன்னெடுத்துள்ளனர்.(05)

# அம்பாறை சைவநெறிக்கூடத்தை நேரில் பார்வையிட்ட சுவிஸ் தூதர்

ஈழத்தில் அம்பாறையில் வளத்தாப் பிட்டி ஊரில் சைவநெறிக்கூடம் கடந்த ஜூலை 15 ஆம் திகதி செந்தமிழ் திருமறையில் தனது 5 ஆவது தமிழ் வழிபாட்டுக் கோவிலாக அருள் ஞானமிகு ஆதிசக்தி உடனாய ஆதிசிவன் திருக்கோவிலை உறுப்பு அமைப்பாக இணைத்துக் கொண்டு திருக்குடமுழுக்கு ஆற்றி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த சைவ நெறிக்கூடத்தை சுவிட்சர்லாந்துக்கான தூதர் சீரி வல்ரெர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இதன்போது, பல்சமய இல்லத்தில் உறுப்பினராக சீரி வல்ரெர் சைவநெறிக் கூடத்தின் செயற்பாட்டினை கேட்டறியவும், இலங்கையில் வாய்ப்புள்ள நற்திட்டங்களை கூட்டாக நடைமுறைப் படுத்தவும் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

வழிபாட்டுத்தீர்மானம், அனைவரும் அருட்சுனையர் ஆகலாம் எனும் கோட்பாடு, குடிமைப்பாகுபாடு (சாதி) மறுப்பு, பெண்களும் அருட்சுனையராகலாம் எனும் முறைமை, அனைத்து மாந்தரும் கருவறை வரை சென்று வழிபடும் சீர்திருத்த சைவ எழுச்சி, போன்ற விடயங்கள் சிவருசி. சசிக்குமாரால் சுவிட்சர்லாந்து தூதருக்கு விளக்கப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கைப் போருக்குபின்னர்தமிழ்மக்களின் நிலம், வழிபாட்டு இடங்கள், கோவில்கள் பலவகையில் வல்வளைப்பிற்கு ஆளாகுவதை தடுக்கும் பணிகளுக்கு சுவிஸ் அரசு தானாக முன்வந்து வெளிப்படையாக செயலாற்ற வேண்டும்எனும்கோரிக்கையினை சைவநெறிக்கூடம் தூதுவரிடம் முன்வைத்துள்ளது.

இந்த ஒன்று கூடலில் தூதருடன் யஸ்ரின் பொய்லாற் மற்றும் டோறிஸ் மனோர் ஆகிய பணிப்பாளர்களும் சைவநெறிக்கூடத்தின் சார்பாளராக சிவருசி. தர்மலிங்கம் சசிக்குமார் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (05)

# மன்னார் வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சர் வருகை





மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவும், வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாகவும் ஆராயும் கண்காணிப்பு விஜயம் ஒன்று புதன்கிழமை மாலை இடம்பெற்றது.



சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன, தலைமையிலானஅமைச்சின்செயலாளர்உள்ளடங்கலான குழுவினர் நேரடியாக வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டதுடன் வெளி நோயாளர் பிரிவு உள்ளடங்கலாக வைத்திய சாலையை பார்வையிட்டனர்.

அதனை தொடர்ந்து வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன் போது மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர், அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் அமைச்சரிடம் நேரடியாக குறைபாடுகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

குறிப்பாக சிரி ஸ்கேன் இயந்திரம் இன்மையால் நாள்தோறும் அதிகளவான நோயாளர்கள் வெளிமாவட்டங்களுக்கு செல்கின்றனர் எனவும் மருத்துவர் பற்றாக்குறை, மருந்து பற்றாக்குறை, சுத்திகரிப்பு பணியாளர் குறைபாடு, மருத்துவ உபகரணங்கள் குறைபாடு, அவசர அம்புலன்ஸ் குறைபாடு உள்ளடங்களாக பல்வேறு விடயங்கள் அமைச்சரின்கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டன.

இந்த நிலையில் தீர்க்கக் கூடிய மிக முக்கிய விடயங்களை விரைவில் தீர்த்து தருவதாகவும் ஏனைய விடயங்கள் வரவு செலவு திட்டத்தின் ஊடாக பெற்றுத்தருவதாகவும் அமைச்சர் வாக்குறுதி வழங்கியிருந்தார்.

மேற்படிநிகழ்வில்அமைச்சருடன்நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், சாள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் உள்ளடங்கலாக பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத் தக்கது.(05)

# குடிதண்ணீருக்கு அல்லற்படும் கிளிநொச்சி கல்லாறு கிராமம்

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட கல்லாறு கிராமத்தில் 250 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்ற நிலையில் குடிநீரை பெற்றுக்கொள்வதில் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த பகுதியில் நீர் நிலைகளில் நீர் உவநீராக காணப்படுகின்ற நிலையில் குடிநீரை வழங்கும் பொருட்டு கரைச்சி பிரதேச சபையால் பிரமந்தனாறு கல்லாறு குடிநீர்த்திட்டம் பிரமந்தன் பகுதியில் நீர்த்தாங்கி மூலம் கல்லாறு கிராமத்திற்கு நீரை வழங்கி வந்த நிலையில் குறித்த நீர் வழங்கல் பல நாட்களாக செயலிழந்துகாணப்படுகின்றது.

மக்கள் தூய்மையான குடிநீரை பணம் கொடுத்தே பெறுகின்றனர்.தனியார் ஒரு லீற்றர் நீரை நான்கு ரூபாவுக்கு விற்பனை செய்து வருகின்றனர். பிரதேசசபையும்இடையிடையே பௌஸர் மூலம் நீரை விநியோகத்தாலும் குறித்தநீரை குடிக்க பயன்படுத்த முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை மூலம் தமக்கு நிலையான நீர் விநியோகத்தை வழங்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றனர்.(05 - 113)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.07.2024இல் வெளியிடப்பெற்றது